ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசொலி

வார இதழ்

முரசு 5 | 16-5-58 | வெள்ளி | ஒலி 5

நீட்டோலை

அன்புள்ள பொன்முடி!

நீண்ட நாட்களாகின்றன, உனக்கு மடல் தீட்டி! முன்பு மாநில மாநாட்டு நேரத்தில் வள்ளுவர் நகரத்திலே எள் போட்டாலும் விழ முடியாத அளவு கூடியிருந்த ஆண்ட இனத்தின் முற்றுகைபற்றி உனக்குத் தீட்டியிருந்தேன். அதற்குப் பிறகு உனக்கும் எனக்கும் என்ன காரணமோ கடிதத் தொடர்பே அறுந்து விட்டது, ஆச்சாரியாருக்கும் காங்கிரசுக்கும் இடையே தொடர்பு அறுந்ததைப்போல!

அன்புள்ள நண்பா! இன்று மீண்டும் அதே போன்றதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

மாநில மாநாடுபோல் சீரும் சிறப்புடனும் நடந்தேறியது திருவாரூரிலே நடந்த 'தஞ்சை மாவட்டத்தின் தி. மு. கழக மூன்ருவது மாநாடு!

அந்த மாவட்ட மாநாட்டிற்கு தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து கழகத் தோழர்களும், பொது மக்களும் திரண்டிருந்தார்கள் என்ருல் நீ உண்மையிலேயே ஆச்சரியப்படுவாய்!

மலேயாவிலிருக்கும் நீ என்ன; மாநாட்டுக்கு வந்திருந்த அத்தனைத் தோழர்களும் 'தஞ்சை' கண்டு ஆச்சரியததால் 'ஆ' என வாயைப் பிளந்தனர் நண்பா; அன்று காலை திருவாரூர் வீதிகளிலே அணிவகுத்துச் சென்ற அழகுமிகு ஊர்வலத்தைப் பார்த்து!

முன்பு மாநில மாநாட்டு ஊர்வலத்தைப் பற்றி உனக்கு எழுதியிருந்தேன், அந்த ஊர்வலம் சேரன் செங்குட்டுவனது படை அணிவகுப்பைப்போல் இருந்ததாக!

அந்தப் பதிற்றுப் பத்துப் பாடலின் நினைவுதான் எனககு இப்போதும் வருகிறது.

எண்ணிறந்த ஆட்களையுடைய தூசிப் படையினரை வெள்ளமாகவும், பகை மன்னரின் குடை முறிப்பதையே தொழிலாகக் கொண்ட யானைப் படைகளை அலைகளாகவும், யானைப் படையின் மேலே வில்லேந்திய வீரர், தாமேந்திய வில்லின் தலை தோன்ற மேம்பட்டு வருவதை அலைமேல் தோன்றும் நீர்த் திவலைகளாகவும், கேடயத்தினுள்ளே காம்பு மறைக்கப்பட்டு பளபளக்கும் அலகை மட்டும் நீட்டிக் கொண்டிருக்கும் வேல்களை மீன்களாகவும், போர்ப் பறையோடு கலந்தொலிக்கும் முரசொலியை முழக்கமாகவும் கொண்டு; சேரன் படையென்னும் பெருங்கடல் நடந்து சென்று; எதிரிகளை வென்று; அவர்களது சினத்தியை அழித்தொழித்ததாகக் கூறுகிருர், புலவர் பெருமான்!

அன்புள்ள பொன்முடி! இந்த மனிதப் பெருங்கடலுக்குச் சற்றும் இளைத்ததல்ல அன்று மாநாட்டுத் தலைவர் மாண்புறு மதியழகன் அவர்களோடும்; திறப்பாளராம் திறணமிகு ப. உ. சண்முகம் அவர்களோடும்; நமது கழகத்தின் சேரன் செங்குட்டுவனும் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் வீற்றிருக்க; அந்த இரு குதிரைகள் பூட்டிய அழகிய ரதத்தை மாநாட்டுப் பொருளாளர் தோழர் கருணாநிதி லகானைக் கையிலேந்தியவாறு ஓட்டி வந்த காட்சி!

ஆர்பாட்டப் போர்ப் பாட்டுப் பாடி ஊர்வலம் புறப்பட்டது; அதோடு தரையிலே தூசியும் மாற்ருர் நெஞ்சிலே மருட்சியும் புறப்பட்டது புகை மேகம்போல!

மற்ற ஊர்வலங்களைப்போல இந்த ஊர்வலம் கழகத் தோழர்களின் வெறும் அணி வகுப்பாக மட்டும் இல்லை; அந்த சிறப்பைச் சொல்லுகிறேன், கேள்!

வழக்கம்போல் யானையிலே கழகத் தோழர் கையிலே இரு வண்ணக் கொடியுடன் ஊர்வல அணியின் முன்னே சென்ருர்...

இதிலென்ன புதுமை என்று தானே கேட்கிருய்? அவசரப்படாதே — அதையும் கூறுகிறேன்!

அந்த அலங்கார நடை போட்டுவரும் யானைக்குப் பின்னல் — ஆகா; அந்தக காட்சியை என்னவென்று சொல்வேன்! ஒவ்வொரு வட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஒவ்வொரு அழகான விமானங்கள் (அல்லது தேர்கள்) கொண்டு வந்திருந்தனர்!

ஒரு வட்டக் கழகத்தார் மாபெரும் ஆகாயக் கப்பலொன்றைச் செய்து; அதில் மறைந்த மாவீரர் பன்னீர்ச்செல்வம் சவாரி செய்வதுபோல உருவம் அமைத்து; ஓமான் கடலில் மூழ்கி மறைந்த அந்த உத்தமனை நமது மனக்கண் முன்னுல் கொண்டு வந்து நிறுத்தினர்!

அடுத்து ஒரு வட்டத்தார் மயில்போல் தோகை விரித்து நகர்ந்து வரும் ரதம் ஒன்றை உருட்டி வந்தனர். அந்த ரதத்திலே அறிஞர் அண்ணுவின் திருவுருவம் அமைந்திருந்த காட்சியும்; அது ஊர்வலப் போக்கில் அசைந்து வந்த காட்சியும், அன்புள்ள பொன்முடி, பார்த்தவர்கள் அத்தனை பேர் கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்ததை என்னென்பேன்! அவ்வளவு அருமை; அவ்வளவு அருமை!

இதுபோலவே பல விமானங்கள்—அலைகடல் கிழித்து வரும் மாபெரும் கப்பல்போல ஒரு விமானம்—கடல் கடந்து கண்ணீர் உகுத்து; உப்புக் கடலையும் உப்பாக்கிக் கொண்டிருக்கும் நம் சகோதரர்களை நினைவுறுத்தும் வகையில்! அதிலே கழக முன்னணி வீரர்களின் அழகுத் திரு உருவங்கள்!

அதற்குப் பின்னுல் உண்மையிலேயே அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறு ரதம்—அதற்குச் சைக்கிள் உருளைகள்! அதிலே தமிழ்க் குலத் தந்தையாம் திருவள்ளுவரது தீந்தமிழ்ச் சித்திரம்!

—இப்படிப் பல; அதை எப்படி எழுதுவேன் இந்த இரு பக்கங்களில்.

அருமை நண்பா! ஊர்வலம் இதுபோன்ற ரதங்கள் மட்டும் நிறைந்ததென்ரு நினைக்கிருய்?

அதுதான் இல்லை! ஆர்யாவர்த்தத்தார் அடியெடுத்து வைக்காத நிலையில் முத்தமிழ் வளர்த்து; புலி—வில்—கயல்—என மூன்று கொடி போட்டு வாழ்ந்த மூவேந்தர் வேடமிட்ட கழகத் தோழர்கள் மூவரைச் சுமந்தபடி ஒரு ரதம் ஊர்ந்து கொண்டிருந்தது!

அவர்களுக்கு முன்னுல் தலையிலே மாபெரும் பாராங்கல்லை; பிடரிகள் உடைபட்டு; தலை வயிற்றுக்குள் அமிழ்ந்து விடுமோ என்று பார்ப்பவர் ஐயப்படும் வகையில் இரு சோர்ந்த உருவங்கள் தள்ளாடித் தள்ளாடித் தூக்கிச் சென்றன!

அந்த இரு உருவங்களும் யார் என்று நினைக்கிருய்?

வேறு யாருமல்ல; தமிழனை இழந்தோரை என் தாய் தடுத்தாலும் விடேன்—என்று கொக்கரித்துக் கிளம்பி; அன்று வீரன் சேரன செங்குட்டுவன் அடங்கா நாவினரின் நாவோடு திமிரையும் சேர்த்து அடக்கி; கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கங்கைக் கரையிலிருந்து கல்லேற்றி வந்தானே; அந்தப் பரிதாபத்திற்குரிய கனகனும் விசயனும்தான் வடநாட்டு ஆணவம் தமிழ்நாட்டு வீரத்துக்குப் பணிந்த வரலாற்றினைப் பகர்ந்திடும் வகையில் அந்த இரு தோழர்கள் வேடத்தில் உருவகப் படுத்தி கல் சுமந்து சென்றனர்!

அவர்களுக்குப் பக்கத்தில் எங்கே எத்துக்கார வடநாட்டு வேந்தர் தப்பி ஓடிவிடப் போகின்றனரோ என்று அஞ்சி குதிரைமீது இரு தமிழ் வீரர் காவல்புரிந்து வந்தனர்!

—ஆமாம், நண்பா! இது போன்றதொரு அசையும் நாடகமே கூடியிருந்தோருக்கும்; வீட்டின் வாசலிலே நின்று இரு மருங்கிலும் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தோருக்கும் ஏற்ற மிகு தமிழகத்தின் வரலாற்றை அவர்கள் மனக் கண் முன்னு ... ம் மறையாத வி ... டிக் காட்டிக் கொ ... வந்தது!

இது ... ஊர்வலம் பல சரித ... ளுக்குச் சமம் என்று நான் சொல்வதை அன்று நீ நேரில் வந்திருந்தால் நிச்சயம் ஒப்புக்கொண்டிருப்பாய். அவ்வளவு 'அர்த்த புஷ்டி'யோடு விளங்கியது அன்றைய ஊர்வலம்!

யானை — குதிரை — ஆகாய விமானம்—கபபல்— அலங்காரச் சிறு தேர்கள்—மூவேந்தர்கள்—அதற்கு முன்னுல் கல் சுமந்த கசடராம் கனக விசயர் — —இப்படி நீண்டு சென்று கொண்டிருந்த ஊர்வலத்திலே இன்னெரு சிறப்பான அம்சமும் இருந்தது!

சோவியத் யூனியனிலே மே தின அணிவகுபபு பற்றிய செய்திப் படங்களை நீ பார்த்திருப்பாய் அதிலே லெனின் — மார்க்ஸ் — ஏங்கல்ஸ் — ஸ்டாலின் ஆகியோரது பெரும் பெரும் படங்களைக் கையிலேந்திக்கொண்டு ஊர்வலம் செஞ்சதுக்கத்தை நோக்கி வந்த வண்ண மிருக்கும்.

அது போலவே மாஸ்கோ



கொடிக் கம்பத்தோடு மறைந்த மாணிக்கங்களாம் பன்னீர்ச் செல்வம், கலைவாணர், அழகிரிசாமி ஆகியோரின் திருவுருவப் படத்தோடு காட்சியளிக்கும் மாநாட்டின் உள் முகப்பு!

வெள்ளி 16-5-58 சென்னை

இரட்டை நாக்கினர்!

"வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது!"

—நம்முடைய இந்த வாதத்தை ஒப்புக்கொள்ள மறுப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல; கம்யூனிஸ்ட் நண்பர்களும்கூடத்தான்!

அவர்கள் இருவரின் வாதப்படி இமயமுதல் குமரிவரை உள்ள இந்தப் பாரதம் எனும் பெரும் நிலப் பரப்பில் தொழில் வளம் எங்கு பெருக்கெடுத்து ஓடினாலும்கூட அது மொத்த இந்தியாவின் முன்னேற்றத்திற்குத்தான் என்று கருதுபவர்கள், அவர்கள்!

—ஆனால் இவையனைத்தும் நம்மைத் தாக்கும்போது மட்டுமே அவர்கள் கூறும் வெறும் வாய் வியாக்யானங்கள்தான்!

தென்னகம் புறக்கணிக்கப்படவில்லை — என்று சொல்வதற்கு வாய் கூசாத அவர்கள்தான் இப்போது தங்கள் இருதயத்தின் எங்கோ ஒரு மூலையில் அந்த உணர்ச்சி பீறிட்டு உதயமாவதை உணரும் நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள்!

கோச்சி தென்னகத்தின் சிறப்பான துறைமுகம்!

அங்கே இரண்டாவது கப்பல் கட்டும் தொழிலைத் துவங்கலாம் என்று ஒரு காலத்தில் முடிவு செய்திருந்தது மத்திய அரசு!

அதற்கென பிரிட்டிஷ் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டது, சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக!

அந்த நிபுணர் குழுவினர் என்ன முடிவு கூறினார்கள்?

கோச்சியில் அந்தத் தொழில் வளர்ந்து வளம் பெறுவதற்குத்தான் எல்லா வாய்ப்புகளும் இருப்பதாகக் குழுவினர் அறிவித்தனர்.

நிபுணர் குழுவே தனது முடிவைத் தடையின்றி அறிவித்தது.

அதன்பிறகு இந்திய அரசு செய்ததென்ன?

வட நாட்டில் உள்ள கட்ச் வட்டாரத்தில் உள்ள கண்ட்லா என்னும் துறைமுகத்தில் இரண்டாவது கப்பல் கட்டும் தொழிலை நிர்மாணிக்கும் முயற்சி இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறதாம்!

இப்படி ஓரவஞ்சக முடிவெடுப்பவர்கள் நிபுணர் குழுவென ஒன்றை வெளிநாட்டிலிருந்து வரவழைப்பானேன்? அவர்களுக்கு வீண் செலவு செய்து தென்னகம் அனுப்புவானேன்?

—இதற்குத்தான் நமக்குப் பதில் கிடைப்பதில்லை.

இதற்குக் கம்யூனிஸ்டுகள் என்ன செய்தார்கள்?

'கண்ட்லாவும் இந்தியாவில் உள்ள துறைமுகம்தானே; கோச்சிக்குப் பதில் அது வளர்ந்தாலும் பரவாயில்லை'—என்று வாளாவிருந்தார்களா?

அதுதான் இல்லை!

"கோச்சியில் (அதை) அமைப்பதற்குச் சாதக சூழ்நிலைகள் இருந்தும், பிரிட்டிஷ் நிபுணர்கள் கோச்சியைத் தேர்ந்தெடுத்தும், கண்ட்லாவில் அமைக்க முற்படுவது கேரள மக்களுக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது. தொழில் துறையில் கேரளத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை அகற்ற கேரள மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, இரண்டாவது கப்பல் கட்டும் தொழிலைப் பெற வேண்டும்!"

—இப்படி அறிக்கை விட்டிருக்கிறார்கள் கோபால மேனன் போன்ற கம்யூனிஸ்ட் நண்பர்கள்!

தெற்கு தேயவில்லை—என்னும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கோச்சி புறக்கணிக்கப்படுகிறது என்று கூக்குரல் போடுகிறார்கள், பாவம்!

ஒருவேளை தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி "வடக்கு மட்டும் வாழவில்லை; தெற்கு தேயவுமில்லை" என்கிற கொள்கையையும்; கேரளத்து கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு மாறுபட்ட கொள்கையையும் கொண்டிருக்கிறதோ, என்னவோ! ஃ

நீட்டோலை...

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

நடக்கும் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பிலும் இது போன்ற படங்கள் இல்லாத ஊர்வலங்கள் இருக்காது!

அன்புள்ள நண்பா! அன்றைய தினம் திருவாரூர் வீதிகள் ஒவ்வொன்றும் சின்னஞ்சிறிய டைனமோ ஸ்டேடியங்களாயின!

ஆனால் அங்கே லெனின், ஸ்டாலின் படங்கள் இல்லை!

அதற்குப் பதில் நமது விடுதலை வீரர்கள் அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், மற்றும் கழக முன்னணி வீரர்கள் — அத்தனை பேரின் எழிலுருவங்களைப் பெரிதாக எழுதிக் கைகளிலே எடுத்துக்கொண்டு ஊர்வலத்தின் அணிவகுப்பிலே கலந்துகொண்டனர்!

மார்க்ஸ், ஏங்கல்ஸ் படங்கள் இல்லை, அங்கே!

அதற்குப் பதில் மறைந்த நம் இயக்கத்து மாமணிகளாம் அழகிரி; தாளமுத்து; நடராசன் ஆகியோரது திருவுருவங்கள் தவழ்ந்தன!

— ஆமாம், பொன்முடி! மொத்தத்தில் திருவாரூர் ஊர்வலம்' இதுவரை தஞ்சையே கண்டிராத அளவுக்கு—வேண்டுமானால் பழைய சோழ வேந்தர்கள் காலத்தில் இது போன்றதொரு அணிவகுப்பு நடந்திருக்கலாம் — நாட்டு வரலாறு கூறுவதாகவும்; இயக்க வரலாறு கூறுவதாகவும் அமைந்திருந்ததைக் கட்சி சார்பற்ற பொதுமக்களும்; மாற்றுக் கட்சித் தோழர்களும்கூட நிச்சயம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

—இத்தனைச் சிறப்புகளையும் கொண்ட ஊர்வலத்திடையே பொதுச் செயலாளர் அவர்கள் திருவாரூர் தி. மு. கழகக் கிளைக் கழகத்திற்கென தோழர் கருணாநிதி அன்பளிப்பாகத் தந்த நிலத்தில் கழகக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

ஊர்வலம் எப்படி மாற்றாரை மருள வைத்ததோ அதுபோலவேதான் மாநாட்டின் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அமைந்திருந்தன.

ஏற்கனவேயே மாநாட்டுப் பந்தல் எல்லோர் கவனத்தையும் இழுத்திருந்தது.

சிறப்பிதழ்!

முரசொலியின் இந்த வார இதழ் திருவாரூர் மாநாட்டின் சிறப்பிதழாக வெளிவருகின்ற காரணத்தால் 'சுருளிமலை' தொடர்கதை இடம்பெறவில்லை. அடுத்த இதழ் வழக்கம்போல் வெளி வரும்.

முகப்பில்...

திருவாரூர் மாநாட்டில் முதல் நுழைவு வாயில்—இது தென்னங் கீற்றுகளால் அமைக்கப்பட்டது!

ஆமாம், தோழா! வேற்று மாவட்ட நண்பர்கள் அனைவரும் உண்மையிலேயே திகைத்துவிட்டார்கள்!

பந்தல் முழுதும் கூந்தல்கள் தோரணங்கள்!

ஒவ்வொரு கம்பத்திலும் மூவேந்தர் ஆண்ட முத்தமிழ் வழங்கும் தமிழகத்தின் முக்கனிகளாம் மா — பலா — வாழை ஆகிய வகைகள் குலைகுலையாய்த் தொங்க விடப்பட்டிருந்தன.

மாநாட்டுப் பந்தலே போதும் தமிழகத்தின் வளத்தைச் சொல்வதற்கு! அவ்வளவு சிறப்பு, நண்பனே!

—இவ்வளவு சீரோடு நடந்த மாநாட்டில் நடைபெற்ற தேன் நிகர் பேச்சுக்களைத்தான் இந்த இதழ் 'முரசொலி' தாங்கி வருகிறதே!

மாநாட்டின் வெற்றி அதன் ஊர்வலச் சிறப்பிலும்; பந்தல் அமைப்பிலும்; நிகழ்ச்சிச் சிறப்புகளிலும் மட்டும் இல்லை! அதன் வருலும் வெற்றித் தாண்டவமாகவே இருந்தது!

ஆமாம், நண்பா! இதுவரை நடைபெற்ற வேறு எந்த மாவட்ட மாநாட்டு மீதத்தை விட அதிகமானது — என்று தஞ்சை மாவட்டத்துக் கழக நண்பர்கள் பெருமைப்படும் வகையில் மாநாடு 20 000 ரூபாய் மீதப்படுத்தியிருக்கிறது!

இப்போதுதான் நீ மாநாடு உண்மையில் பெரிய வெற்றி என்பதை ஒப்புக்கொள்கிறாய்! —இல்லையா?

அன்புள்ள,
நண்பன்.

ஊர்வலத்தில் மூவேந்தர்!

மாநாட்டுத் தலைவர் — திறப்பாளர் — பொருளாளர் — வரவேற்புக் குழுத் தலைவர்.

லாம் மிகக் குறுகிய காலத்தில் சுதந்திரச் சங்கு ஊதியிருக்கின்றன என்பதை இப்போதுதான் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்!

இரண்டு மூன்று ஆண்டு கால நிகழ்ச்சிகளை கவனமாக எடுத்துப் பாருங்கள். காட்டு மிராண்டிகள் மட்டுமே வாழ்வதாகக் கருதப்பட்ட ஆப்பிரிகாவிலுள்ள அல்ஜீரியா நாட்டுக்காரன் விடுதலை பெற்றிருக்கிறான்! டுனீஸியா, மொராக்கோ, கோல்டு கோஸ்டு நாட்டுக்காரர்கள் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள்! சைப்ரஸ் தீவு சுதந்திரப் போராட்டம் நடத்துகிறது! மலேயா சுதந்திரம்பெற்றிருக்கிறது! இந்தோனேஷியா விடுதலை பெற்று, அங்கே வேறொரு கிளர்ச்சியும் ஆரம்பமாகியிருக்கிறது!

இப்படிப்பட்ட சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க—தங்கள் வாழ்வை நிர்மாணித்துக் கொள்ள நல்ல காரியங்களையெல்லாம் நடத்திக்கொண்டேயிருக்கின்றன! ஆனால் இந்தப் பெரிய நாட்டைப் பொருத்த

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின் பரம்பரை புகழ் பாடக் கூடினோம்!

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநாட்டில் என்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்டமைக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே திருவாரூரிலேதான் பதினன்கு ஆண்டுகளுக்கு முன்; எனது பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் முதற் சொற்பொழிவை, நாம் ஊர்வலமாக வருகிறபோது கடந்த கமலாலயத்தின் எதிரிலேயுள்ள கழக உயர்நிலைப் பள்ளியில் நிகழ்த்தினேன்.

அப்போது நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவன். எனது நண்பர் கருணாநிதி இந்த ஊர் உயர்நிலை பள்ளி மாணவர். அவர் அமைத்திருந்த மாணவர் மன்றத்திலேதான் என்னைப் பேச அழைத்திருந்தார்.

இன்றைய தினம் நீங்கள் அமைத்துக் காட்டிய பிரமாண்டமான ஊர்வலத்தைப் பார்த்தேன். சோழ மன்னர்களுடைய காலத்தில், பெரிய வெற்றி நாட்களிலேகூட இவ்வளவு பெரிய அணிவகுப்பு, ஊர்வலம் நடந்திருக்குமா என்று நீங்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இதற்கு என்ன காரணம்? இன்று நம்முடைய வனப்பும் எழிலும், நாம் பட்டிருக்கின்ற தியாகங்களுக்கெல்லாம் சிகரம் வைப்பது போலாகும். பள்ளிகளிலே பல்கலைக் கழகங்களிலே—மூலை முடுக்குகளிலே—சாலைகளிலே சோலைகளிலே—எங்கு பார்த்தாலும் இதே பேரார்வம்! எங்கள் நாடு எங்களுக்கு ஆக வேண்டும் என்று தீவிர உறுதியைத்தான் உங்களுடைய கண்களிலே—பேச்சுகளிலே—மூச்சுகளிலே — நடவடிக்கைகளிலே எல்லாம் காணுகிறேன்.

குறுகிய காலத்திலேயே நாம் எவ்வளவு பெரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்பதை சமீபத்திலே வடநாட்டிலேயிருந்து இங்கு இறக்குமதிசெய்யப்பட்டு, தமிழ் நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்த தேபர் அவர்களது பேச்சின் மூலம் நன்கு அறியலாம்.

தேபருடைய கூட்டம் ஒன்றை நானே கேட்க நேரிட்டது. அவர் சுற்றிச் சுற்றி நம்மைத்தான் தொட்டார். காங்கிரசின் சாதனைகளைப் புகழ்ந்து பேசிய அவர், கடைசியில், 'நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக கைதட்டுகிறீர்கள்! நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகக் கை தட்டுகிறீர்கள்!" என்று அடிக்கடி சொன்னார். அவர்கள் சாதித்தை யெல்லாம் புள்ளி விவரங்களோடு விளக்கிவிட்டு. கடைசியில் இன்னொன்றும் கூறுகிறார், "தீப்பொறி பறக்கும் பேச்சுகள் தேவை என்றால் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் போங்கள். நாங்கள் நிர்வாக வேலையைச் செய்கிறோம்" என்று! நமக்குப் பெரிய பாராட்டுரை தந்தார் என்று இதை நான் கூறவில்லை.

இவர்களுக்கு என்ன தெரியும் என்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள் ஒரு நேரத்தில்! 'புள்ளி விவரம் தெரியுமா? படித்திருக்கிறார்களா? வாதத் திறமையுண்டா? அறிவாற்றல் உண்டா? — என்று ஒரு சில நேரத்தில் பேசிவருகிறார்கள். ஆனால். இவர்களுடைய ஸ்தாபனத்தைக் கட்டிக் காக்கும் மாபெரும் காவலர் தேபர் சொல்லுகிறார், "தீப்பொறி பறக்கப் பேசுவோம் என்று! அதற்கு என்ன காரணம்? யார் தீப்பொறி பறக்கப் பேசுவார்கள்? உள்ளத்தில் தீயுக்குச் சமமான வேதனைகள் இருப்பதால்தான் வார்த்தைகளும் வெடித்துக் கிளம்புகின்றன! ஆனாலும் நம் உள்ளத்திலே தூய்மை இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வளவு ஒழுங்காக—தீரமாக—அழகாக — புகழ்ச்சியாக பேசுகிறதென்றால், நம்முடைய உள்ளத்திலே தெளிவு இருக்கிறது; உண்மை இருக்கிறது; துன்பங்களைக் களைந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது!

இன்றைக்கு பதினெட்டு வருடங்களுக்கு முன்பு, இந்தத் திருவாரூரிலேதான், முதன் முதலில் 'திராவிட நாடு தனி நாடாக ஆக வேண்டும்' என்ற சுதந்திர இலட்சியமே உருப்பெற்றது. பெரியார் இராமசாமியின் தலைமையிலே நடைபெற்ற நீதிக் கட்சியின் மாநாட்டில் இந்தக் காவிரி நதி தீரத்திலேதான் திராவிடத் திருநாடு தனியாகப்பிரிய வேண்டுமென்று நம் முன்னவர்கள் உறுதி மொழி எடுத்தார்கள்.

பதினெட்டு வருடங்களுக்கு பிறகு இன்று மறுபடியும் நம்மை நாமே பார்த்துக் கொள்கிறோம். ஓரளவுக்குத் திருப்திதான்; ஓரளவு நிம்மதிதான்; ஏனெனில் ஓரளவுக்கு நல்ல காரியத்தைத்தான் நாம் செய்திருக்கிறோம்!

ஆனால் மிகச் சின்னஞ் சிறு நாடுகள்—மக்கள் தொகை குறைந்த; வசதியில்லாத; பணமில்லாத; இலக்கியமில்லாத; பெரும் ஆற்றல் நிறைந்த தலைவர்களைப் பெறாத நாடுகள் எல்லாம்...

வரையில், இவ்வளவு பெரிய எழுச்சியும் விழிப்பும் ஏற்பட்ட பின்னாலேயும் நம்முடைய கோரிக்கை கவனிக்கப்படவில்லை. 1947-ம் ஆண்டுக்குப் பின்னால் வடநாட்டிலே ஏற்பட்ட புதியதொரு வல்லரசுக்கு நாமெல்லாம் அடிமைகளாகி விட்டோம்! நடைப் பிணங்களாக மாறிவிட்டோம்!

அப்படி நம்மை அடிமைப் படுத்தி வைக்க—நம்மை அரசாள—சுதந்திரம் என்ற பெயரால் ஓர் அரசியல் சட்டத்தை அவர்கள் நிர்மாணித்தார்கள்.

அந்த அரசியல் சட்டத்தை எங்கேயோ இருக்கின்ற டெல்லிக்காரர்கள், நாம் ஏமாந்த வேளையிலே—நாம் விழித்திருக்காத நேரத்திலே—நம்முடைய சம்மதத்தைப் பெறாது செய்து விட்டார்கள். நம்மைப் பிடித்து வைத்திருக்கிற அந்த சட்டத்தின் மூலம்தான் நம்முடைய நாட்டு வரிகள் எல்லாம் சுரண்டப்பட்ட[illegible]முடைய மானம் டெல்லி[illegible] அடகு வைக்கப் பட்டது! நம்முடைய மொழி சிதைக்கப்பட்டது!

உலகத்து சுதந்திர நாடுகள் எல்லாம்தான் அரசியல் சட்டம் நிர்மாணித்திருக்கின்றன; எப்படி? நாட்டு மக்களுடைய சம்மதத்தைப் பெற்று—அபிப்பிராயத்தைக் கேட்டு—ஒத்துழைப்பைப் பெற்று—பிறகுதான் செய்தார்கள்!

ஆனால், இங்கே இரண்டு, மூன்று கோடி ரூபாய்கள் செலவு செய்து. ஒரு ஐந்தாறு பேர்கள் கையிலே அதை ஒப்படைத்தார்கள்.

யார் அவர்கள்? அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்—என். கோபாலசாமி அய்யங்கார்—டாக்டர் அம்பேத்கார்—கே. எம். முன்ஷி! இவர்களில் யார் சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள்? யார் சிறைச்சாலைக்குச் சென்றவர்கள்?

[தொடர்ச்சி பக்கம்—10]

திருவாரூர் மாநாட்டில்
தோழர் கே. ஏ. மதியழகன்
தலைமையுரை

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த மூன்றாவது மாநாட்டைத் திறந்து வைப்பதில் நான் பெருமையும் பூரிப்பும் கொள்கிறேன்.

இத்தகைய ஒரு சிறப்பான மாநாடு நமக்குக் களிப்பையும், அதே நேரத்தில், இந்த மாநாட்டைப் பார்க்கும்போதோ—அல்லது கேள்விப்படும்போதோ—மாற்றாருக்கு; அதிலும் குறிப்பாக காங்கிரஸ் கட்சித் தோழர்களுக்கு பொறாமையையும்தான் உண்டுபண்ணும்.

அந்தப் பொறாமையின் விளைவாக இன்றைய தினம் அவர்கள் செல்லுகின்ற இடமெல்லாம், அவர்களது சாதனைகளைப் பற்றி பேசுவதற்கு மறந்தாலும், நம்மைத் தூற்றுவதற்குத் தவறுவதில்லை!

நாம் வளர்ந்துவிட்டவர்கள்! நாட்டு நலனுக்கான நல்ல பல காரியங்களைச் செய்து வருபவர்கள்! நாட்டு விடுதலைக்குப் போராடிக் கொண்டு வருபவர்கள்! மக்கள் தேவையறிந்து ஆயிரமாயிரம் திட்டங்கள் தரத் தகுதி பெற்றவர்கள்!

தலைவர்களின் உருவப்படம் தாங்கிச் செல்கிறது ஊர்வலம்!

பரிதியென எழுந்துவிட்டோம்-- இனிப் புழுதிதான் நம் பகைவர்!

நாம் கேட்டோம், நாம் வாழுகின்ற நாட்டிற்கு, தமிழ் தழைத்திருக்கிற நம் பூமிக்கு ஏன் தமிழ்நாடு என்று பெயரிடக் கூடாதென்று. ஆனால் அமைச்சர்கள் தமிழ்நாடு என்று பெயர் வைக்க மறுத்துவிட்டார்கள். ஆனால் இவர்களது அமைப்புக்குப் பெயர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி! தமிழ் மொழி உலாவுகின்ற இந்த நாட்டிற்கு ஏன் அந்தப் பெயரை வைக்கக் கூடாது? சென்னை ராஜதானி—சென்னை ராஜ்யம்—சென்னை ஸ்டேட்-இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்!

மேலும் நம்மைப் பார்த்து, சட்ட சபையில் உங்களால் என்ன திட்டங்கள் தர முடியும்; திட்டத்திற்கான என்ன யோசனைகள் வழங்க முடியும்—என்றும் கேட்கிறார்கள். நாம் ஒன்றுமே கேட்காமல், வாயை மூடிக்கொண்டு மௌனமாகவா இருந்துவிட்டோம்?

சேலத்திலே இரும்பு எடுப்பீர்களா—என்று கேட்டோம்!

அந்தத் திட்டம் என்னிடம் இல்லை; நேருவைக் கேட்கச் சொல் என்கிறார்கள்!

நீ மூங்கில் காடு அதிகமிருக்கிறதே; காகிதத் தொழிற்சாலை வைப்பாயா?

என்னால் முடியாது; நேருவைக் கேட்கச் சொல்!

தமிழகத்து மண்ணிலே சுண்ணாம்புக் கல் ஏராளம் இருக்கிறதே, சிமெண்ட் தொழிற்சாலை வைப்பாயா?

அது என்னால் சாத்தியமில்லை; நேருவைக் கேட்கச் சொல்!

தமிழகத்திலே வேறு என்னதான் தொழிற்சாலை வைத்திருக்கிறாய்?

இதோ வைத்திருக்கிறேன் பார்; செருப்புத் தொழிற்சாலை—அப்பளத் தொழிற்சாலை! அவைகளைப்பற்றி புகழ்ந்து பேசு!

அணைகள் கட்டினீர்களா?

அவைகளை எல்லாம் வடக்கே கட்டியிருக்கிறோமே; பார்த்ததில்லையா?

அண்ணா சொன்னார்கள், "பாலாற்றுக்கு அடியிலே ஓடுகின்ற கீழ் ஊற்றுத் தண்ணீரை எடுத்து வெளியே விடுங்கள்; பாலாற்றை நம்பிக்கொண்டிருக்கின்ற வயல்கள் மீண்டும் வளம் பெறும்; நெற் களஞ்சியமாக மாறும்" என்று! ஏற்றுக் கொண்டார்களா? பரீட்சார்த்தமாகவாவது முயற்சித்தார்களா? முடியாது என்று மறுத்து விட்டார்களே!

வெளியே வந்து கேட்கிறார்கள், என்ன திட்டம் இவர்கள் கொடுத்தார்கள் என்று! இன்னும் என்ன திட்டங்கள் தேவை? நாங்கள் என்ன, கையிலே வெடிகுண்டு வைத்து உள்ளே வந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டார்களா? நாவின் நுனியிலே செந்தமிழ்த் தாயை ஏந்தி உள்ளே வந்திருக்கிறோம்! எங்கள் கரம் மாசற்ற கரம்! எங்கள் இதயம் தூய்மையானது! நாங்கள் சொல்லுவது ஒவ்வொன்றும் தமிழக மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தழுவியதாகும்!

கைத்தறி நெசவாளரின் பிரச்சினையை கவனித்தீர்களா என்றால், முடியாதாம்! நேரு மறுக்கிறாராம். ஏன் மறுக்கிறார்? நெசவாளர்களைப் பற்றி—சிங்களத்திலே அவதிப்படுகின்ற தமிழர்களைப் பற்றி—கவனிக்க மறுக்கிறார். காரணம் என்ன? சுப்பிரமணியம் சொல்கிறார், 'நிதி கிடையாது' என்று!

சென்னையிலே கவர்னர் மாளிகையிலே பூந்தோட்டம் ஒன்று வைத்திருக்கிறார்கள். அதற்காக கனம் சுப்பிரமணியம் ஆண்டு ஒன்றுக்கு 65,000 ரூபாய் செலவு செய்கிறார்! அவசியம்தானா அது? அந்த 65,000—த்தை வசூலிப்பதற்காக எத்தனை ஏழை விவசாயிகளின் நரம்பை முறித்திருப்பார்கள்? அவர்களது உழைப்பு அவர்களுக்கு மிக மிகச் சாதாரணமாகத் தெரிந்துவிட்டது!

கவர்னர் மாளிகைக்கு சுண்ணாம்பு அடிக்க 1,80,000 ரூபாய் செலவு செய்கிறார்கள். அந்த ஆடம்பரச் செலவுகளுக்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது?

இந்தக் கேள்விகளை நாம் எழுப்புகிற நேரத்திலே எல்லாம், வடக்கு திசை நோக்கி கையை நீட்டி, நேருவைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அந்த நேருவும்—காந்தியாரின் சீடரும் இப்போது விலகிவிடுகிறேன் என்று சொல்லுகிறார்! அதற்காக அவர் சொல்லுகின்ற காரணங்களை நாம் நம்பத் தயாராயில்லை!

பதவி மோகம் காங்கிரசிலே மலிந்துவிட்டது; லஞ்சம் அதிகரித்துவிட்டது—இந்தக் காரணங்களைவிட முக்கியமான ஒரே ஒரு காரணம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போது படுதோல்வி அடைந்துவிட்டது. இந்த இக்கட்டான நிலையில், இருக்கின்ற பொறுப்பினை வேறு யார் தலையிலாவது சுமத்திவிட்டுப் போகலாம் என்று கருதியிருப்பார் நேரு! அதைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாது!

அப்படிப்பட்ட தோல்வி அடையும் திட்டங்களைப் போட்டுக்கொண்டு, நம்மையும் சேர்த்துப் பிணைக்க எண்ணுகின்ற நேரு சர்க்காரோடு இனியும் நாம் தொடர்பு கொண்டிருக்க முடியுமா? ஆனாலும் காமராசர் சொல்லுகிறார், "தென்னாட்டுக்காரர்களும், வடநாட்டுக்காரர்களும் உறவினர்" என்று! இருக்குமோ என்னவோ! அதனாலேதானே என்னவோ, நாகநாட்டுக்காரர்கள் தனது உடையை அவருக்குக் கொடுத்தார்கள்! அங்கு சென்ற மற்றவர்களிடம் அந்த உடையைக் கொடுக்காத அவர்கள், காமராசரைக் கண்டதுமே, 'நமது நாட்டுக்காரன் ஒருவன் தெற்கே இருக்கிறானே' என்று எண்ணினார்கள் போலும்! அதனால்தான் காமராசர் வடநாடு—தென்னாடு உறவு பற்றிப் போகுமிடமெல்லாம் திருவாய் மலர்ந்தருளி வருகிறாரோ!

என்ன உறவைக் கண்டுவிட்டீர்கள்?

தெற்கே விளைகிற மணிலாப் பயிர் 'டால்டா'வாக ஆக்கப்படுகிற இடம் வடக்கே!

தெற்கே கோலாரில் எடுக்கப்படுகிற தங்கத்திற்கு விலை நிர்ணயிக்கப்படுகிற இடம் வடக்கே—பம்பாய்!

தெற்கே விளைகிற பஞ்சு நூலாக—துணியாக ஆக்கப்படுகிற இடம் வடக்கே—ஆமதாபாத், ஷோலாப்பூர்!

தமிழகம் எப்படி வாழும்? எப்படி வளம் பெறும்? தமிழகத்தின் தொழில் வளம் எப்படி முன்னேற முடியும்?

திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்புகின்ற கேள்விகள் இதுதான்!

நாடு மீட்கவேண்டும்; மொழி காக்க வேண்டும்; நல்ல இதயம் படைத்த இளைஞர்களே! திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை அழைக்கிறது! வந்து சேருங்கள் பட்டாளத்தில்!

[தொடர்ச்சி பக்கம்—11]

திருவாரூர் மாநாட்டில்
தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ.
திறப்புரை

தஞ்சை மாநாட்டில் அறிஞர் அண்ணா பேருரை

தஞ்சை மாவட்ட மாநாடு திருவாரூரிலே இரண்டு நாட்களாக மிகச் சீரான முறையிலே—நாமெல்லாம் கண்டு மகிழ்ந்து பெருமைப்படத் தக்க வகையிலே நடைபெற்றிருக்கிறது.

இந்த மாநாட்டை நடத்தியவர்களுக்கும், மாநாட்டின் வெற்றிக்குக் காரணமானவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களிடத்திலேயே தங்கி—மாநாட்டைச் சிறப்பான முறையிலே நடத்தி — கடைசியிலே 20,000 ரூபாயை மிச்சப்படுத்தித் தந்த என்னுடைய தம்பி கருணாநிதிக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'20,000 ரூபாயை மட்டுமல்ல நான் அண்ணாவிடம் காட்டுவது; தஞ்சை மாவட்டத்தைக் காட்டுகிறேன்; தஞ்சையிலே கொள்கை குலுங்கிக் கொண்டிருக்கிற காட்சியைப் பாரீர்! பாரீர்!" என்று கருணாநிதி என்னிடத்திலே எடுத்துச் சொன்னதைக் கேட்டீர்கள். அதிலே மகிழ்ச்சி அடைகிறேன் என்றாலும், கருணாநிதி இதைச் செய்யாவிட்டால் எப்படி என்னுடைய தம்பி என்று சொல்ல முடியும்? ஆகவேதான், இதிலே உண்மையிலேயே பெருமை இருந்தாலும், இது இயற்கையானதுதான்!

கருணாநிதியின் கரம் பட்டதால் இந்த மாநாட்டில் 20,000 ரூபாய் மிச்சப்பட்டதென்று கருணாநிதி நமக்கு எடுத்துச் சொன்னதைக் கேட்டோம்! ஆனால், நான் சொல்கிறேன், தம்பி...உன்னுடைய கரம்பட்டு லட்சக் கணக்கான பணம் பெற்றவர்கள் தமிழகத்தில் ஏராளமான பேர் இருக்கிறார்கள்...மிகக் குறைந்த தொகைதான் கழகத்திற்கு உன்னாலே இன்றைய தினம் பெற முடிந்திருக்கிறது!

மாநாட்டில் நண்பர்கள் சுவைபடப் பேசினார்கள் என்பது மட்டுமல்ல; நீங்களும் இதில் உற்சாகத்துடன் கலந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது மட்டுமல்ல; மாநாட்டுப் பந்தலை அமைத்திருக்கிற முறையே சுவை சொட்டச் சொட்ட இருப்பதைப் பார்க்கிறேன். மேடையிலே நான் உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, பந்தல் காலுக்கு பந்தல் கால் கட்டியிருக்கிற வாழைப் பழங்களையும், பலாப் பழங்களையும் பார்த்து, 'சுவையாக இருக்குமே; சுவையாக இருக்குமே' என்று என்னுடைய கண்கள் மேலேயே நின்று விட்டன; அதே நேரத்தில் கீழே நீங்கள் கனிவான முகத்துடன் உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்த்து, இதைவிடச்சுவையான கனிகள் கீழே இருக்கின்றனவே என்று என்னுடைய கண்கள் தானாக கீழே இறங்க ஆரம்பித்து விட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அளவிற்கு மகத்தான வளர்ச்சியை அடைந்திருப்பதற்குக்காரணம், அதில் இன்று ஈடுபட்டிருப்பவர்கள் மகத்தானவர்கள் என்பது அல்ல; துவக்கியவர்கள்கூட மகத்தானவர்கள் அல்ல; மிகச் சாமான்யர்கள்தான் இந்த இயக்கத்தைத் துவக்கினோம். ஆனால், இன்றைய தினம் மிக வேகமாகப் பரவி, தம்பி சம்பத் உங்களிடத்திலே சொன்னது போல் டெல்லி வட்டாரத்திலே உள்ளவர்களால் கூர்ந்து கவனிக்கப்பட்டு — உலகத்திலே உள்ளவர்களால் பேசப்படுகின்ற அளவிற்கு வேகமாக வளர்ந்திருக்கிறது. அதன் வளர்ச்சியைப் பற்றி நம்மிலே யாருக்கும் — மாற்றாருக்கும்கூட ஐயப்பாடு இல்லை! ஆனால் விசித்திரமான வேதனையைப் பற்றி உங்களிடத்திலே நான் சொல்லிக் கொள்ள வேண்டும்; நம்முடைய இந்த மகத்தான வளர்ச்சியை உலகம் சரியானபடி தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

நாட்டிலே நாம் அடைந்திருக்கின்ற எழுச்சியை — நாள்தோறும் நாம் காணுகின்ற எழிலோவியத்தை உலகத்திலே உள்ளவர்கள் காண முடிகிற அளவிற்கு நம்மிடையே பத்திரிகை பலம் இல்லை!

இரண்டாவது, நம்முடைய இயக்கத்திற்கு சட்டசபைக்கு வெளியே பலம் அதிகம்; சட்டசபைக்கு உள்ளே பலம் குறைவு! காங்கிரஸ் கட்சிக்கு சட்டசபைக்கு உள்ளே பலம் அதிகம்; வெளியே பலம் குறைவு! இந்த வேதனை நிரம்பிய விசித்திரத்தை மாற்றுவதற்கு உங்கள் திறமையைப் பயன்படுத்தினால்தான் நாம் பெற்றிருக்கின்ற வளர்ச்சியை உலகத்தில் உள்ளவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்!

நீங்கள் மறந்து விடக்கூடாது; நானும் மறந்து விடவில்லை; டில்லி பாராளு மன்றத்திலே இப்படிப்பட்ட எழுச்சி உள்ள இயக்கத்தின் சார்பிலே உள்ளவர்கள் இரண்டே இரண்டு தோழர்கள்! அவர்கள் 20 தோழர்களுக்குச் சமமானவர்கள் அறிவில், ஆற்றலில்—அதை நான் உணருகிறேன்! அந்த இருவரும் பெருமைப்படத்தக்க அளவில் பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள்—அதையும் உணருகிறேன்! ஆனால் வெளிநாட்டிலிருந்து அங்கு வருகின்ற தூதுவர்கள், "திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எத்தனை பேர் பாராளு மன்றத்தில் இருக்கிறார்கள்?" என்று கேட்பார்களேயானால், நாம் இந்த இருவரைத்தானே காட்ட முடிகிறது! அங்கே இரண்டு பேரையும், சென்னை சட்ட மன்றத்திலே பதினைந்து பேரையுமே வைத்துக் கொண்டிருக்கிற இயக்கம் இவ்வளவு வேகத்திலே வளர்ந்திருக்கிறது என்றால் உலகத்தார் அவ்வளவு எளிதில் நம்ப மாட்டார்கள்! ஏனெனில், நம்முடைய எட்டு ஆண்டு கால வளர்ச்சியானது உலகத்தில் வேறு எந்த நாட்டிலேயும், எந்த இயக்கமும் பெறாத வளர்ச்சி!

ஆகவே தோழர்களே! திராவிடப் பெருங்குடி மக்களே! இந்த அரிய வளர்ச்சியை நாம் ஏதோ சாதாரணமாகப் பெற்றுவிடவில்லை! தர வேண்டிய விலையைத் தந்தோம்! கொட்ட வேண்டிய குருதியைக் கொட்டினோம்! பொழிய வேண்டிய வியர்வையைப் பொழிந்தோம்! தாங்க வேண்டிய ஏச்சுக்களையும், பேச்சுக்களையும்கூட தாங்கி யிருக்கிறோம்! காட்ட வேண்டிய தியாகத் தழும்புகளையும் நாட்டுக்குக் காட்டியிருக்கிறோம்.

ஒவ்வொரு மாநாட்டிலேயும் நான் இந்த எழிலுள்ள காட்சிகளைக் காணுகின்ற நேரத்தில், நாம் இப்படி வளர்வதற்காக தங்கள் இரத்தத்தைச் சிந்தியவர்கள்—வியர்வையைக் கொட்டியவர்கள் — இன்னுயிரைத் தந்தவர்கள்—அத்தனை பேரையும் மனக் கண்களிலே நினைத்துப் பார்த்து, அவர்கள் சிந்திய இரத்தம் வீண் போகவில்லை; கொட்டிய வியர்வை வீண் போகவில்லை; உழைப்பு நல்ல உருவெடுத்திருக்கின்றது—என்று எண்ணி, அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்திக் கொள்ளுவேன்.

நம்மிலே யாரும் பெரிய பாண்டித்யம் பெற்றவர்களல்ல; புலவர் பெரு மக்களல்ல; பெரிய சீமான்களல்ல; சிற்றரசர்களல்ல! நம்மிலே பல பேர் இலக்கியம் பேசுகின்றோம்; ஆனால் நாம் இலக்கியம் பேசுகின்ற நேரத்தில், அதிலே ஏற்படுகின்ற கவர்ச்சிக்குக் காரணம், அந்த இலக்கியத்தை எதிலே கொண்டு வந்து இணைக்கிறோம் என்பதிலேதான் இருக்கிறது! நம்மைவிடத் தெளிவாக— ஆழ்ந்த அறிவோடு இலக்கியத்தைப் படித்திருப்பவர்கள் — தமிழ்ப் பெரும் புலவர்கள்—தமிழகத்தில் ஏராளமாக இருக்கத்தான் செய்கிறார்கள்!

நம்மிடத்தில் புலமையை எதிர்பார்த்து கூட்டம் கூடவில்லை. நம்முடைய புலவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை



இதுபோன்ற சிறு தேர்கள் ஊர் வலத்தில் ஏராளம்; ஏராளம்!

இனிய பேச்சு கேட்பவர்கள்-நாளை இன்னுயிரையும் தந்திடுவார்கள்!

எடுத்துக் காட்டி, இன்றைய தினம் எப்படி புல்லர்கள் கையிலே சிக்கி யிருக்கிறோம் என்பதையும் எடுத்துக் காட்டுகிறோம், நாம்!

நாம் வரலாறு அத்தனையும் நன்றாகப் படித்து விட்டோம் என்பதல்ல; ஆனால் ஒரிரு வரலாற்றுத் துணுக்குகளை நம்மிலே பல பேர் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில், கேட்பவர்களுக்கும் முறுக்கு ஏற்படுகிறது! கூனன் நிமிர்ந்து உட்காருகிறான்! விழியற்றவனுக்குப் பார்வை தெரிவது போன்ற பிரமை தோன்றுகிறது! ஊமைக்குக்கூட பேசலாமா என்று தோன்றுகிறது! இன்னும் சொன்னால் காங்கிரஸ்காரர்களுக்குக்கூட கனிவு வருகிறது!

இங்கே அமர்ந்திருக்கின்ற ஒவ்வொரு தோழரும் — என்றாவது ஒரு நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விடுதலைக் குறிக்கோளுக்காக தன் இன்னுயிரைத் தர வேண்டுமென்றாலும் தருவதற்கு சித்தமாக இருப்பவர்கள் என்பதை நான் மனதார உணர்ந்திருக்கிறேன். உங்களை எந்த நேரத்திலே அந்த ஆபத்தான விளையாட்டிலே நான் சிக்க வைக்கப் போகிறேனோ; அது எனக்கே தெரியாது! எந்த நேரத்திலே அப்படிப்பட்ட பயங்கரமான பரிசோதனையை நாட்டை ஆள்பவர்கள் நமக்கு வைப்பார்களோ; அதையும் இன்றைய தினம் அரசியல் ஆருடத்திலே கணிக்க முடியாது!

ஆனால், ஆட்சியாளர்களுக்கு நான் சொல்லுவேன் — என் எதிரிலே காணுகின்ற இந்த இளைஞர் கூட்டம் மாநாட்டுக்குக் கட்டணம் கொடுத்து வருபவர்கள் மட்டுமல்ல; சிறைச்சாலைக்கு அழைக்கப்பட்டால், உள்ளே செல்வதற்கு, 'நான், நீ' என்று போட்டியிட்டுக் கொண்டு வருபவர்கள் மட்டுமல்ல; நான் அழுத குரலிலே கேட்கிறபோது — நான் குற்றுயிராக இருக்கின்ற நேரத்திலே உங்கள் இன்னுயிரைத் தர வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில் — தமிழகத்திலே பல்லாயிரக் கணக்கான வாலிபர்கள் தாய்த் திருநாட்டை மீட்பதற்கு உயிரைத் தருவதற்கும் தயாராக இருக்கிறார்கள்!

ஆட்சியாளர்கள் நம்முடைய வளர்ச்சியின் உட்பொருளை — தமிழக அரசியல் நிலையை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்!

அல்ஜீரிய, டுனீசிய நாடுகளின் விடுதலைக் கிளர்ச்சிகளைப் பற்றி மாநாட்டுத் தலைவர் மதியழகன் அவர்கள் சொல்லக் கேட்டீர்கள். அதைப்போலவே 'தென்னகத்தாராகிய நீங்கள் ஒரு புரட்சி நடத்தினால்தான் உங்களை மதிப்பேன்' என்று நேரு பண்டிதர் சொன்னால் — இந்திய சர்க்கார் ஒரு அறிக்கை விட்டால் — இவர்கள் 1942-ல் எத்தனை ரயில்களைக் கவிழ்த்தார்களோ, அதைப்போல் பத்து மடங்கு ரயில்களைக் கவிழ்த்துக் காட்ட முடியும்!

'நாங்கள் ரயில்களை மட்டும் கவிழ்த்தோமில்லை; துப்பாக்கிக் குண்டுக்கு மார்பு காட்டினோம்' என்று அவர்கள் சொன்னால், அப்படிப்பட்ட தோழர்கள் மட்டுமல்ல; அதைவிட வீர உணர்ச்சி படைத்த தோழர்கள் மட்டுமல்ல; அன்று உங்களோடு இருந்த தோழர்களிலேயே நூற்றுக்கு இருபது பேர் இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்றார்கள் என்ற உண்மையை ஆட்சியாளர் உணரவேண்டும்! வேட்டு முறையிலே எனக்கு விருப்பம் வந்து விட்டது; திராவிட முன்னேற்றக் கழகம் பலாத்காரத்தை நாடுகிறது — என்று யாரும் தவறாகக் கணக்குப் போடவேண்டாம்.

பலாத்காரத்திற்குத்தான் நான் மதிப்பு அளிப்பேன் என்று இந்திய சர்க்கார் சொன்னால் — ரத்தத்தைப் பார்த்தால் தான் எனக்கு விஷயம் புரியும் என்று நேரு பண்டிதர் சொன்னால் — இரத்தத்தைக் கொட்டுவதற்கும், தியாகத் தழும்புகள் ஏற்றுக் கொள்வதற்கும் — வீர மகனைத் தருவதற்குத் தாய்மார்களும் தமிழ் நாட்டிலே தயாராகி விட்டார்கள்!

அவர்கள் பழைய தமிழ் இலக்கியத்தை காதாரக் கேட்டு, நெஞ்சாரப் பதியவைத்து, தாங்கள் ஒரு வாழ்ந்த இனம் என்பதை இன்று நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டார்கள்!

ஈராயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னாலே — உலகத்திலே இருள் சூழ்ந்திருந்த நேரத்திலே — தமிழகத்தில் ஒளி இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார்கள்! உலகத்திலே எழுதவோ, படிக்கவோ மக்கள் முயற்சி செய்துகொண்டிருந்த நேரத்தில், தமிழகத்துப் பெரும் புலவர்கள், இன்று படித்தாலும் நன்றாகப் பொருள் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு மிகத் தூய்மையான தமிழில் — மிக அழகான, ஆழ்ந்த கருத்துக்களை தொல்காப்பியத்திலேயும், அகத்திலேயும் புறத்திலேயும், பத்துப் பாட்டிலேயும் எட்டுத் தொகையிலேயும், இவைகளையெல்லாம் உள்ளடக்கியதைப் போலக் காட்சியளிக்கின்ற திருக்குறள் மூலமாகவும் தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள்!

நண்பர்களே! இன்றைய தினம் நாம் அடிமைகள்! வடநாட்டிற்கு எடுபிடிகள்! அவர்களுக்குக் கப்பம் கட்டித் தீர வேண்டிய நிலையிலே உள்ளவர்கள்!

இன்றைய தினம் நம்முடைய வாணிபம் சீரழிந்து கிடக்கிறது! நம்முடைய விவசாயம் வாட்டத்தையும் வருத்தத்தையும்தான் விளைவாகத் தருகின்றது! நம்முடைய வாலிபர்கள் முதுகு வளைந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள்! தாய்மார்களிலே பல பேர் தற்குறிகளாக இருக்கின்றார்கள். நம்முடைய நாட்டு வளம் அத்தனையும் வட நாட்டுக்குத்தான் பயன்படுகிறது!

இன்றைய தினம் நீராவிக் கப்பல்கள், தமிழனை — நம் உடன் பிறந்தானை — காவிரிக் கரையிலே உலவிக்கொண்டிருப்பவனை — ஒரு கவளம் சோற்றுக்காக இலங்கைக்கும், சாவகத் தீவிற்கும், போர்னியோவிற்கும், மலேயாவுக்கும், ஜான்சிபாருக்கும் சுமந்துகொண்டு செல்கிறது! ஆனால், நம்முடைய மூதாதையர்கள் மடியிலே முத்தையும், நெஞ்சத்திலே தமிழ்ப் புலமையையும், கண்களிலே வீரத்தையும் தாங்கிக் கொண்டு, யவன நாட்டுக் கடை வீதிகளிலே இறங்கி, தன்னுடைய நாட்டிலேயிருந்து கொண்டு வந்த முத்துக்களைக் காட்டி — நாட்டுப் புலமையை எடுத்துச் சொல்லி — வீரத்தை விளக்கி — விருதுகள் பெற்றுத் திரும்பினார்கள்.

கதரை எவ்வளவு கனமாக உடுத்தி இருந்தாலும், கைராட்டினத்தை எத்தனை ஆண்டு காலம் சுற்றியிருந்தாலும், காந்தியார் படத்தின் முன்னால் எத்தனை தடவை கன்னத்திலே போட்டுக் கொண்டிருந்தாலும், நேரு பண்டிதர் நிற்கின்ற திக்கு நோக்கி தண்டம் இடுகின்ற அளவிற்கு உள்ளவர்களானாலும், அந்தக் காங்கிரஸ்காரர்களே ஒரு கணம் யோசிக்கட்டும்! நாம் எந்த இனத்திலே பிறந்தோம்? எப்படி எப்படியெல்லாம் வாழ்ந்தோம்? இன்றைய தினம் எந்த நிலையிலே இருக்கிறோம்? இந்த வினாக்களுக்கு விடையாக நம் வீர வரலாற்றின் ஒரு துணுக்கை மட்டும் மனதிலே பதிய வைத்துக் கொள்வார்களேயானால், என்னையும் சம்பத்தையும், கருணாநிதியையும், நெடுஞ்செழியனையும் விலக்கிவிட்டு அந்த காங்கிரஸ் நண்பர்கள் முன் வரிசையிலே வந்து உட்காரத்தான் செய்வார்கள்!

ஏனெனில், தமிழர் தம்மைத் தமிழர் என்று உணர்ந்த பிறகு இந்த இயக்கத்தைத் தவிர வேறு எந்த இயக்கத்திலும் சேருவதற்கு அவர்களது உள்ளம் இடந்தராது! அப்படிப்பட்ட நண்பர்களையெல்லாம் நம்மிடத்திலே வர வழைப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

இது கனிகின்ற காலம் என்று நான் கருதுகிறேன். அதற்குக் காரணம் ஒருபுறம் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல; அதைப் போலவே மற்றொரு புறத்திலே அடைய வேண்டிய அளவிற்கு வளர்ச்சி அடைந்த காங்கிரஸ் இன்றைய தினம் தளர்ச்சி நிலை பெற்று — தாங்க முடியாத நோய் பீடிக்கப்பட்டு — சரிந்து விழுகின்ற நிலைமைக்கு ஆளாகி விட்டது!



வண்டிமேல் வைத்த விமானங்கள் 'ஊர்வலத்தின் தனிச்சிறப்பு!

உவகை தரும் ஊர்வலத்தில் இது ஒரு பகுதி!

நாட்டு மக்களுடைய வரிப் பணம் மட்டுமல்ல; தன்மானம்; வீர உணர்ச்சி; எதிர்காலம்—எல்லாமே எந்த அளவிற்குப் பாழாக்கப்பட்டு வருகிறதென்பதை உணரவேண்டும்!

பணப் பெட்டியை ஊழல் நிறைந்தவர் கையிலே கொடுத்துவிட்டு, ஆறு இல்லையே; பாலமில்லையே; பள்ளிக்கூடமில்லையே—என்று அங்கலாய்த்துக் கொண்டால் அதிலே பயனில்லை!

ஆகையினால் இங்கே காணப்படுகின்ற இந்த ஆர்வத்தை—உணர்ச்சியை பதப்படுத்தி—பக்குவப்படுத்தி — அடுத்தத் தேர்தலில் தஞ்சைத் தரணியைப் பொறுத்தவரை "நாங்கள் ஐந்து எம். எல். ஏ.க்களைப் பெற்றிருக்கின்றோம்" என்று பட்டியல் காட்டினால், தமிழ்நாடே ஆச்சரியத்தால் அகக் கண்களை விரித்துப் பார்க்கும்!

நம்முடைய கழகத் தோழர்களுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அதை நான் சொல்லுகின்ற நேரத்தில் ஏதோ குறை

பணப் பெட்டி ஊழலுக்கு இரை! பண்டித நேரு குழப்பத்தில் சிறை!

நம்முடைய கரங்களிலே வலிவு ஏறி வருகிறது; மாற்றாருடைய கரங்களிலே வலிவு குறைந்து வருகிறது!

நம்முடைய இரத்தத்திலே சூடு ஏறிக் கொண்டிருக்கிறது: மாற்றாருடைய இரத்தத்திலே சூடு ஏறாதது மட்டுமல்ல; இரத்தம் கட்டிக் கொண்டிருக்கிறது!

நம்முடைய நாடி நரம்புகளிலே நல்ல முறுக்கேறியிருக்கிறது; மாற்றாருடைய நாடி நரம்புகள் தளர்ந்து சோர்ந்து விட்டன!

நம்முடைய கண்களிலே நல்ல கனிவும், நல்ல ஒளியும், நல்ல நம்பிக்கையும் வீசிக் கொண்டிருக்கிறது. அவர்களது கண்களில் நம்பிக்கைக் குறைந்து வருகிறது!

இன்று காலைப் பத்திரிகை நமக்கு என்ன செய்தியைத் தருகிறது? அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் தேபர் ரகசியக் கூட்டத்தைக் கூட்டி, காங்கிரஸ் உறுப்பினர்களை, முதன் மந்திரிகளை, கட்சித் தலைவர்களையெல்லாம் உட்கார வைத்துக் கொண்டு புத்திமதி சொல்லியிருக்கிறார். என்ன புத்திமதி? நாட்டிலே லஞ்சமும், ஊழலும் தாண்டவமாடுகிறது. இப்படிக் கெட்டுவிட்ட இந்தக் காங்கிரசை வைத்துக் கொண்டிருப்பதைவிட கலைத்து விடலாம் என்று நான் கருதுகிறேன் — என்று தேபர் சொல்லுகிறார்.

இந்த நிலைமையைச் சற்று மனக் கண்களிலே படம்பிடித்துப் பார்ப்பதைப்போல் ஒன்றுக்கொன்று பக்கத்திலே வைத்துப் பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே இந்த மாநாடு நடைபெறுகிறது; இருபதாயிரம் ரூபாய் மிச்சம் காட்டியதோடு, சொன்னைக் குலுங்கும் கோலாகலக் காட்சியைப் பாரீர் என்று கருணாநிதி சொல்லுகிறார், பெருமையோடு!

இதே நேரத்திலே தேபர், "காங்கிரசிலே லஞ்சம் மிகுந்து விட்டது; ஊழல் தலைவிரித்தாடுகிறது; நேரு பண்டிதர் தலையிலே துணியைப் போட்டுக்கொண்டு போய்விடுகிறேன் என்கிறார்; அவரது கண்ணீரைத் துடையுங்கள்; அவருடைய கலக்கத்தைப் போக்குங்கள்! அவர் கலங்குவதைவிட காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிடலாம்!" என்று பேசுகிறார்.

இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இதைவிட நல்ல சூழ்நிலை உங்களுக்கு என்றைய தினம் கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்? வேறு யாருக்குத்தான் கிடைத்தது?

நாம் வளருகிறோம் என்பது நமக்குப் புரிகிறது; அவர்கள் கெடுகிறார்கள் என்பது அவர்களுக்கே நன்கு தெரிகிறது!

அதைப் போலவே நேரு பண்டிதரும் சொல்லுகிறார், "நான் போய் விட்டால, நாட்டிலே என்னென்ன தொல்லைகள் நேரிடும் என்பது உங்களுக்குத் தெரிகிறது; என்றாலும் இங்கே இருந்து மனம் புழுங்குவதைவிட நான் கொஞ்ச நாளைக்கு வெளியே போய் இருக்கிறேன்!" என்று.

ஆனால், இருவரும் சேர்ந்து உண்மையான குற்றமென்ன; உண்மையான ஊழல் எங்கேயிருக்கிறது என்பதைச் சொல்லவில்லை.

நான் இந்த மாநாட்டின் மூலமாக காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்களுக்கு ஒன்று சொல்லுவேன்! உங்களுடைய காங்கிரஸ் கட்சிதான் இன்றைய தினம் டெல்லி செங்கோட்டையிலே கொடி பறக்கவிட்டிருக்கிறது—பாராளுமன்றத்திலே கொலுவீற்றிருக்கிறது. அதனிடத்திலே ஆண்டு ஒன்றுக்குத் தரப்படுகிற வரிப் பணம் ரூ. 400 கோடி ரூபாய்! அதைப்போல சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் கணக்குப்படி 63 கோடி ரூபாய் இந்த ஆண்டிலே வரியாகக் கட்டியிருக்கிறோம்.

இவ்வளவு பெரும்பாலான தொகையை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிற ஒரு காங்கிரஸ் கட்சி தங்களுடைய மாநாடு நடத்தி — கமிட்டிக் கூட்டம் ஒன்று நடத்தி "எங்களிடத்திலே லஞ்சம் மிகுந்து விட்டது; ஊழல் மலிந்துவிட்டது!" என்று சொன்னால், என்ன பொருள்? தொட்டுத் தாலி கட்டிய கணவனை கன்னத்திலே அடித்து, "பைத்தியமே! நேற்று இரவு நான் எங்கே போயிருந்தேன் தெரியுமா?" என்று எந்த மனைவியும் கேட்க மாட்டாள். கேட்பவளை எந்தக் கணவனும் மனைவியாக ஏற்றுக் கொள்ளவும் மாட்டான்.

ஆனால், 400 கோடி ரூபாய் வரியாக வாங்கிய இந்த காங்கிரஸ் கட்சி நம்மைப் பார்த்துச் சொல்லுகிறது; "நீங்கள் தருகின்ற பணம் எதற்குப் பயன் படுகின்றது தெரியுமா? ஊழலான நிர்வாகத்திற்கு! லஞ்சத்திற்கு! லாவணத்திற்கு!" என்று! இதைப் பார்த்தால் நமக்குப் புரிகிறது காங்கிரஸ் கட்சி சரிவதோடு மட்டுமலல; அதன் நிர்வாகம் அவர்களுக்கே திருப்தி அளிக்கவில்லை; அதன் நிர்வாகத்திலுள்ள ஊழலை — லஞ்சமும், லாவணமும தலைவிரித்தாடுவதை அவர்களே பேச வேண்டிய அளவிற்கு நிலைமை மோசமாகி விட்டது!

இந்த மூன்றையும் நீங்கள் ஒன்று சேர்த்துப் பாருங்கள்—நாம் வளர்ந்திருக்கிறோம்; காங்கிரஸ் கட்சி பலம் குறைந்து வருகிறது; அதிலே ஊழல் மிகுந்து விட்டது!

அத்தகைய காங்கிரஸ் கட்சி இன்று நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது என்றால்,

சொல்லுகின்றேன் என்று யாரும் எண்ணிவிடவேண்டாம்.

நமது கூட்டங்களிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுகின்றீர்கள். தேர்தல் காலத்திலேயும் நிச்சயம் ஓட்டளிப்பீர்கள். ஆனால், ஓட்டளிக்க வேண்டுமென்று கருதுகிற நீங்கள், "ஓட்டு அளிக்கலாமா; கூடாதா?". என்று ஐயப்பாட்டோடு இருக்கிறவர்களிடத்திலே உரையாடி — அவர்கள் உள்ளத்திலே தெளிவு ஏற்படுத்தி—சந்தேகம் இருந்தால் அதை நீக்கி—அருவருப்பு இருந்தால் அதைப் போக்கி — அவர்களையும் நம் பக்கத்தில் அழைத்துக் கொண்டு வருகின்ற அந்த வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டும்! இப்போது செய்வதைவிட இன்னும் கொஞ்சம் தீவிரமாகவே செய்ய வேண்டும்!

காங்கிரஸ்காரர்களது கூட்டங்களில் ஆயிரம் பேர், ஐநூறு பேர் வந்தால்' தலைவர்களே மலைத்துப் போகிறார்கள், இவர்களெல்லாம் எங்கிருந்து வந்தார்கள் என்று! அவ்வளவு சிறிய கூட்டம் அங்கு கூடினாலும், வருகின்ற ஒவ்வொருவரும் ஐம்பது பேருக்கு — நூறு பேருக்கு ஓட்டுகளை வாங்கிக் கொண்டு வருகிற பெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றார்கள். அதற்கான முறையில் அவர்கள் உழைக்கிறார்கள்!

தேர்தலைப்பற்றி நான் சொல்லுகிற நேரத்தில், மதிப்புக்குரிய திராவிடர் கழகத் தோழர்கள் நம்மைப்பற்றி பேசுவதை மறந்து விட்டுப் பேசவில்லை. அவர்கள் சொல்லுகிறார்கள், தேர்தலிலே வெற்றி பெற்றால் திராவிடநாடு கிடைத்து விடுமா —என்று.

திராவிடநாடு கிடைப்பதற்கு அதுவும் ஒரு வழி என்றுதான் நாம் சொல்லுகிறோம். அது எப்படி சாத்தியமாகும் எனக் கேட்பதானாலும், அந்த வழியைச் சொல்லுகிறேன். பதினைந்து பேராக இருக்கின்ற

திராவிட நாட்டு விடுதலைக்கு சட்ட மன்றத்தில் நமது போர் முறை!

ஊர்வலத்தில் வந்த அலங்காரத் தேர்களில் இதுவும் ஒன்று!

நாங்கள் அடுத்த முறை சட்டசபைத் தேர்தலிலே நூறு பேராகச் செல்லுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். காங்கிரஸ் கட்சி அந்த அளவிற்கு வராமல், கவர்னர் நம்முடைய கட்சிக்காரர்களைக் கூப்பிட்டு, "நீங்கள்தான் மெஜாரிட்டியாக வந்திருக்கின்ற காரணத்தால் அமைச்சரவையை நீங்களே ஏற்படுத்துங்கள்!" என்று சொல்லுவார்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பொதுச் செயலாளர் என்ற முறையிலே கவர்னரிடம் போய்ப் பேசி, "நாங்கள் அமைப்பதிலே அட்டியில்லை. ஆனால் நாங்கள் உள்ளே வந்ததும் நிறைவேற்றுகின்ற முதல் தீர்மானம் வடநாட்டுத் தொடர்பிலேயிருந்து—டெல்லி ஆட்சியிலேயிருந்து இந்த நாடு விடுபட வேண்டும்!" என்பதுதான் என்று சொல்லுவார்.

"அப்படி' தீர்மானம் நிறைவேற்றுவதற்கு சட்டத்திலே இடமில்லையே!" என்று அவர்கள் சொன்னால், "அதற்கு இடமிருக்க வேண்டும்; சட்டத்தை மாற்ற வேண்டும்—என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவோம்!" என்பார் நாவலர்.

"செய்யுங்கள், பார்க்கலாம்!" என்று கனர்னர் அனுமதியளிப்பார். உள்ளே சென்று நாம் உட்கார்ந்து, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பழைய காலத்து மாமன்னர்களைப்போல் எழுந்து நின்று, தம்முடைய அரிய இலக்கியத்தைக் காட்டி பன்னெடும் காலமாக ஈடும் எடுப்புமாக வாழ்ந்து வந்த தமிழகம் இன்றையதினம் வடவருடைய கரத்திலே சிக்கிக் கொண்டிருக்கிற கொடுமையை விளக்கி, "ஆகையால் இந்த வினாடி முதல் நாங்கள் டெல்லி ஏகாதிபத்தியத்திலேயிருந்து விடுபடுகின்றோம்" என்று சொன்னால், திராவிடம் விடுபட்டுவிடாது. ஆனால், உடனே கவர்னர் நாம் அமைக்கின்ற மந்திரி சபையைக் கலைத்து விடுவார்.

கலைத்தவுடனே என்ன நடக்கும்? என்னுடைய மனக் கண்களிலே அதிகமான கோட்டைகளைக் கட்டுகிறேன் என்று காங்கிரஸ்காரர்கள் எண்ணக் கூடும்... இந்தக் காட்சிகளைப் பார்க்காமல் நாங்கள் யாரும் சாகமாட்டோம்! அப்படி எங்களிலே யாராவது பலகீனத்தால் செத்தாலும், இதைப் பார்ப்பதற்கு ஏற்ற நல்ல கண்களை வைத்துவிட்டுத்தான் சாவோம்! நாம் அமைக்கின்ற மந்திரி சபையைக் கலைத்துவிட்டபின் கொஞ்ச காலத்திற்கு கவர்னர் ஆட்சி நடக்கும். ஆனால் உலகத்தினுடைய கண்களுக்கு முன்னால் கடைசி வரை கவர்னரே ஆள முடியாது. மறுபடியும் ஒரு தேர்தல் நடத்தியாக வேண்டும். அந்த மறு தேர்தலிலே நூறு பேர் நூற்றியிருபது பேராக மாறும். சென்ற தடவை நாவலர் நெடுஞ்செழியன் எழுந்துநின்று சொன்னதற்குப் பதிலாக, இம்முறை காலின்மேல் காலைப் போட்டு, சபாநாயகரைத் திரும்பிப் பார்த்து, "எழுதிக் கொள்ளுங்கள்; நாங்கள் டெல்லியிலேயிருந்து விடுபட இருக்கின்றோம்!" என்று சொல்ல—மறுபடியும் வெளியே துரத்த—மறுபடியும் பொதுத் தேர்தல் வரட்டும்! இப்படி இந்த அரசியல் ஊஞ்சல் எத்தனை காலம் நடத்த முடியும்?

அதற்குப் பின் தமிழ்நாட்டில் வட நாட்டுப் பட்டாளத்தை வைத்துக் கொண்டுதான் வரிகள் வாங்க முடியும். அந்த நேரத்திலே நாங்களும் நீங்களும் மற்றவர்களும் வரி கட்டாதே என்று சொன்னால் நிலத்தை எடுப்பேன் என்பாகள். நாட்டிலே உள்ளவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர ஆரம்பித்தால், அந்த நிலத்தை யார் ஏலததில் எடுப்பார்கள்?

குஜராத் மாகாணத்தில் சர்தார் பட்டேல் வரிகொடா இயக்கத்தைத் துவக்கிய நேரத்தில், மகாத்மா காந்தி கேட்டார், "நீங்கள் நிலவரி கட்ட வேண்டாம் என்று சொன்னால், வெள்ளைக்காரர்கள் நிலத்தை ஏலம் போடுவார்களே!" என்று! அதற்கு—"நிலத்தைத்தான் ஏலம் போடுவார்களே தவிர; பெயர்த்து சீமைக்கா எடுத்துக் கொண்டு போவார்கள்? பார்க்கிறேன், ஒரு கை!" என்றார் பட்டேல்.

அப்படிப்பட்ட 'சர்தார் பட்டேல்கள்' தமிழகத்தில் இல்லையென்று டெலலியிலே உள்ளவர்கள் கருதுவார்களேயானால் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள்!

மேற்சொன்ன நிலைமையில், பத்து ஆண்டு காலம் — பதினைந்து ஆண்டு காலம் இரண்டு மூன்று தேர்தல்கள் நடந்தால, வடக்கே உள்ளவர்கள் இதை இனி கட்டி மேய்க்க முடியாது என்று தெரிந்து, அவர்களாகவே பஞ்சாயத்துக்கு வந்து, "உங்களுக்கு என்னதான் வேண்டும்? என்னென்ன அதிகாரங்கள் வேண்டும்?" என்று கேட்க வேண்டிய நிலை நிச்சயம் ஏற்பட்டே தீரும்!

அப்படி எங்காவது நடக்கிறதா என்று நீங்கள் என்னை கேட்கலாம். நான் பழைய வரலாற்றை உங்களிடத்திலே சொல்ல வரவில்லை; ஒரு மாதமாக நடைபெற்று வருகின்ற வரலாற்றைக் குறிப்பிடுகிறேன்!

சின்னஞ்சிறு தீவு ஒன்று இருக்கின்றது—மால்ட்டா என்பது அதன் பெயர். அதனுடைய மொத்த பரப்பளவு 124 மைல் என்று வரலாற்றிலே குறிக்கப்பட்டிருக்கிறது! அதிலுள்ள மக்கள் தொகை சில லட்சம்தான்! அந்த மால்ட்டா தீவு இன்றையதினம் இங்கிலாந்து நாட்டினிடத்திலே பிடிபட்டிருக்கின்றது. இங்கிலாந்து நாட்டினுடைய கப்பல் தளவாடங்கள் அந்தத் தீவிலேதான் இன்றையதினம் மிக மகோன்னதமான முறையிலே அமைக்கப்பட்டிருககிறது. அந்தத் தீவிலே ஒரு தொழிற் கட்சி இருக்கிறது. அந்தத் தொழிற் கட்சியினுடைய தலைவர் பெயர் மின்டாஸ் என்பது.

அவருடைய கட்சிக்காரர்கள் மால்ட்டாவிலிருக்கிற பாராளு மன்றத்தில் 23 பேர்கள் இருக்கிறார்கள். மால்ட்டா பாராளு மன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் முப்பதிலிருந்து நாற்பதிற்குள்தான். ஆகையினால் இருபத்தி மூன்று பேர்களாக இருக்கின்ற அவர்களால் ஆட்சி அமைக்கப்பட்டு, மின்டாஸ் முதன் மந்திரி ஆக்கப்பட்டார்.

முதன் மந்திரியான உடனே "இங்கிலாந்து நாட்டின் பிடியில் மால்ட்டா இருக்கிறது, அப்படி இருந்தாலும்கூட இங்கிலாந்து நாட்டின் எழில், நாட்டின் வளம், கிடைக்கின்ற ஊதியம் என்னுடைய தீவிற்குக் கிடைக்கவில்லை. அவைகளை எல்லாம் நீங்கள் செய்வீர்களா? இல்லையானால் மால்ட்டா தனியாகப் பிரிகிறது என நான் பிரகடனப்படுத்தட்டுமா?" என்று பதினைந்து நாட்களுக்கு முன்னால் கேட்டார்.

மால்ட்டா தீவு கேட்டது என்றால் அதற்கு என்ன பொருள்? திருவாரூரிலேயிருந்து மாயவரம் வரையிலுள்ள ஒரு வட்டாரம் கிளம்பி "நாங்கள் தனிநாடு அமைக்கிறோம்" என்று சொன்னால் எப்படியோ, அந்த அளவிற்குத்தான் மால்ட்டா தீவு இருக்கிறது.

வெள்ளைக்கார நாட்டிலிருந்து அங்கு அனுப்பப்பட்ட கவர்னர், மின்டாசை வரவழைத்து "பிரிந்து போகவேண்டுமென்று தனியரசு கேட்கிறாயாமே; உண்மைதானா?" என்று கேட்டார். மின்டாஸ் ஒப்புக் கொண்டார். "அப்படியானால் உன்னை சீமைக்கு அழைக்கிறார்கள். அங்கேபோய் பேசிவிட்டு வா!" என்று சொன்னார்.

மின்டாஸ் சீமைக்குச் சென்றார். அங்கே இருக்கின்ற வெளிவிவகார மந்திரி இரண்டு மூன்று நாட்கள் கனிவாகப் பேசி, "நீ எவ்வளவு பணம் கேட்கிறாயோ தருகிறோம்; பிரிந்து போகாதே! தனியரசு கேட்காதே!" என்றெல்லாம் சொன்னார். அதற்கு மின்டாஸ், கேட்கின்ற அளவிற்குக் கொடுத்தால் ஒழிய ஒப்புக் கொள்ள மறுத்தார்.

"நீ கேட்கின்ற அளவிற்கு எங்களிடத்திலே பணமில்லை" என்று பிரிட்டிஷ் மந்திரி கெஞ்சிப் பார்த்தார். கடைசிவரையிலே பலிக்காத காரணத்தால் மின்டாஸ் மால்ட்டா தீவிற்கு வந்து, பார்லிமெண்டிலே 'மால்ட்டா இங்கிலாந்து ஆட்சியிலேயிருந்து விலகி தனி நாடாக விரும்புகிறது' என்ற தீர்மானத்தை நிறைவேற்றி

அடக்குமுறை அட்டவணை தீட்டியோர் ஜனநாயகம் பேசுவது விந்தையே!

[4—ம்பக்கத் தொடர்ச்சி]

அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்என்பவர் அட்வகேட்ஜெனரலாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சார்பிலே பதவி வகித்துக் கொண்டிருந்த மனிதர்!

கோபாலசாமி அய்யங்கார், உதவி கலெக்டர் வேலையிலே தொடங்கி, காஷ்மீர் மந்திரி வேலை வரையில் வெள்ளைக்கார சர்க்காரின் தயவில் உத்யோக மண்டலத்திலே உலவிய பெரும் சுகவாசி!

டாக்டர் அம்பேத்கார், இவர்களால் பரிகசிக்கப்பட்டவர்!

நான்காவது மனிதரான முன்ஷி யார்? பாரத் வருஷம், ராம ராஜ்யம் என்றெல்லாம் சொல்லி, கங்கை நதி தீரத்தில் பர்ணசாலை அமைத்துக் கொண்டு, ஆர்யாவர்த்தத்தை ஆட்சி செய்த அந்த மகோன்னத நாட்கள் இங்கே ஏற்பட வேண்டுமென்று கனவு காண்பவர்!

இப்படிப்பட்ட பிற்போக்குக்காரர்களால் உண்டாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின்படிதான் நாம் இன்று ஆளப்படுகிறோம்; அதன்படி இன்னும் ஏழு வருடங்களிலே இந்தி மொழிதான் நமக்கு மொழியாகுமாம்; தமிழ் மொழி இருக்காதாம்! இப்படிச் சொல்கிறார்கள், ஆணவத்தோடு!

நாம் பெரிய தலைவரைத்தான் டெல்லியின் தலைவராக வைத்தோம்! பண்டிதநேரு சாதாரணமானவரல்லவே! ஆசியாவின் ஜோதி—பஞ்சசீலம் போதிக்கும் பண்டிதர்! அவரது ஆற்றலை உலகத்தில் எவரும் மறுத்ததில்லை!

எந்த முகலாய சிற்றரசுக்கும் கிடைக்காத பெருமை, அலகாபாத்திலேயுள்ள ஒரு வக்கீல் குடும்பத்திற்கு-காஷ்மீர நாட்டு பிராமணக் குடும்பத்திற்கு ஏற்பட்டது-அதையும் சரித்திரம் மறக்காது!

தேசியப் போராட்டத்தின் விளைவால், பண்டிதர் செளிநாட்டுப் பல்கலைக் கழகத்திலே படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே, இங்கே தலைமைப் பதவி காத்துக் கிடந்தது!

காந்தியாரின் செல்லப் பிள்ளையாய்-அரசியல் வானின் பல்லாண்டு கால உன்னதத் தாரகையாய்-ஒளிவிடும் நட்சத்திரமாய் பிரகாசிப்பவர் அவர்!

"ஜவஹர்லால் நேருவா; அவர் இளைஞருடைய சின்னம்-வாலிபருடைய சின்னம்-புதிய நவ இந்தியாவின் எழுச்சி" என்றெல்லாம் மக்களால் போற்றி வளர்க்கப்பட்டவர்.

அப்படிப்பட்ட பெருமைமிக்க நேருவின் ஆட்சி பதினோரு ஆண்டுகளை முடித்துக் கொண்டது. அதற்குப் பின்னால்தான் சென்ற வாரத்திலே அவர் சொல்லுகிறார், "என்னாலே ஒன்றும் செய்யவே முடியவில்லை. தோல்வியுற்று விட்டேன். எனவே இமயமலைச் சாரலில் எந்த இடத்தில் தங்கலாம் எனக்கு ஒய்வு தேவை!" என்று.

எவ்வளவு பொறுப்பற்றவர்கள், எவ்வளவு சுரண்டல்காரர்கள், எவ்வளவு தன்னலக்காரர்கள் இன்றைய தினம் டெல்லி மூலபீடத்திலே நிறைந்து விட்டார்கள் என்பதைத்தான் நாம் இதனால் உணர முடிகிறது!

அப்படிப்பட்டவர்களுடைய ஆட்சியோடு—டெல்லியோடு தென்னாடு இனி என்ன உறவு வைத்துக் கொள்ள முடியும்? அங்கிருந்து நாம் என்ன பலனை எதிர் பார்க்க முடியும்?

அவர்கள் அமைத்திருக்கிற மந்திரி சபையில் எத்தனை பேர் தென்னாட்டவர்கள் இருக்கிறார்கள்? சுமார் பத்து கோடி திராவிடர்களுக்கு கே. சி. ரெட்டி என்ற கன்னட நாட்டுக்காரர் ஒருவருக்கு மந்திரிப் பதவி தந்திருக்கிறார்கள்! ஆனால் நேருவினுடைய சொந்த மாகாணமாகிய உத்திரப் பிரதேசத்திலிருந்து ஆறு பேர்; பம்பாய் மாகாணத்துக்காரர்கள் ஐந்து பேர் பெரிய மந்திரிகள்.

அத்தனை பேர் வடநாட்டுக்காரர்கள் இருந்தும்கூட அவர்களுடைய ஸ்தாபனம் கலகலத்து—கட்டுக் குலைந்து—மிகவும் கிழ்த்தரமான நிலைக்குத்தான் போய்கொண்டிருக்கிறது.

ஒரிஸாவிலே நடக்கும் தகராறு உலகக் கேலிக்கு இடமாகி விட்டது!

மைசூரிலே இருக்கிற காங்கிரசின் உள் குழப்பம் அவர்களுக்கே கவலையைத் தந்துவிட்டது! முதன் மந்திரி பீடத்திலேயிருந்த நிஜலிங்கப்பாவை அங்கே காணோம்! யாரோ புதிதாக ஒருவர்-யாருக்கும் தெரியாத ஒருவர்-பம்பாய் மாகாணத்துக்காரராம் அவருக்கு அங்கே முதன் மந்திரிப் பதவி தூக்கித் தரப்பட்டு விட்டது!

கேரளாவிலே காங்கிரசுக்கு செல்வாக்கு இல்லை என்ற நிலை!

ஆந்திராவிலே குமுறிய அமளி இப்போதுதான் கொஞ்சம் அடங்கியிருக்கிறது!

பஞ்சாபிலே தகராறு - உத்திரப் பிரதேசத்திலே முதன் மந்திரியாக யார் வர வேண்டும் என்ற பதவிச் சண்டை அதிகரித்துக்கொண்டே போகிறது!

இப்படி யாரையுமே காப்பாற்ற முடியாது என்ற அளவிற்கு அவர்கள் பலகீனமாகிக் கொண்டு வருகிற நேரத்திலேயும் வெறித்தன்மையும், சுயநலச் சுபாவமும், இத்தனை கோடி மக்களையும் அடிமைகளாகவே வைத்திருக்க வேண்டுமென்ற தன்னல ஆதிக்கமும் டெல்லியிலே வளர்ந்துகொண்டே போகிறது!

இவர்களுடைய ஆட்சி காலத்திலேதான், வெள்ளைக்காரன் காலத்திலேயும் இல்லாத எத்தனையோ முறையான அடக்குமுறைகளை நாம் பார்த்தோம். இருந்தாலும் இங்கேதான் பிரஜா உரிமை காப்பாற்றப்படுவதாக பீற்றித் திரிகிறார்கள்!

இங்கே அமர்ந்திருக்கின்ற நம்மில் ஆயிரக் கணக்கானோர் சிறைச்சாலைக்குச் சென்றுவிட்டு வந்திருக்கிறோம்!

இவர்கள் ஆளவந்த பிறகுதான் அறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களுக்குத் தடை விதித்திருககிறார்கள்!

பத்திரிக்கைக்குத் துணிந்து ஜாமீன் வசூலித்திருக்கிறார்கள்!

நமது தோழர் ஆசைத் தம்பியைச் சிறைச்சாலையிலே அடைத்துப் பூட்டினார்கள்! நாடகங்களுக்கு தடைகள் — போன்ற —இன்னும் மிகக் கொடிய எத்தனையோ தவறான காரியங்கள்! - இருந்தாலும் பிரஜா உரிமை; பிரஜா உரிமை என்ற எழுத்துக்களை குப்பைக் கூளத்தைப்போல அரசியல் சட்டத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள்!

இப்போதுகூட, சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா பேச முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு நடைபெறுகிறது. அரசியல் தலைவர்களை இப்படி குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி விட்டுத்தான் குடியுரிமைகள் பற்றியும் ஜனநாயகம் பற்றியும் கதையளக்கிறார்கள், ஆளப் பிறந்தவர்கள் தாமே என்று எண்ணி இறுமாந்திருப்பவர்கள்!

இது என்ன கேலிக் கூத்து? இரண்டு மாதம், மூன்று மாதம் காரணமின்றி ஒருவரைச் சிறைச்சாலையிலே தள்ள இவர்களிடம் ஒரு சட்டம் இருக்கிறது! அதற்குப் பெயர் தடுப்புக் காவல் சட்டம்! அதன் ஆயுளையும் நீடித்திருக்கிறார்கள்! இது தான் குடியுரிமையா?

இரண்டு வாரத்துக்கு முன்னால் ஆச்சாரிய கிருபளானி சொன்னார், இவர்களது அதிகார போதையைப்பற்றி. பழைய காலத்து லூயி மன்னர்களைப் பற்றி-ஜேம்ஸ் மன்னர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். லூயிமன்னன் பிரான்ஸ் நாட்டின் ஆர்ப்பாட்டக்காரன்; கொடுமைக்காரன்; சுயநலத்திலே நீந்தித் திளைத்தவன்! அதேபோல் ஜேம்ஸ் மன்னர்களும் சார்லஸ் மன்னர்களும் இஙகிலாந்து நாட்டிலே மன்னர்கள்தான் பெரிய மகேஸ்வரர்கள்என்று மமதையோடு கூறிக் கொண்ட கொடியவர்கள்! அதனாலே தலை வெட்டப்பட்டவர்கள்! அப்படிப்பட்ட மன்னர்களுக் கில்லாத அதிகாரம் இன்றைய தினம் ஒரு சாதாரண அமைச்சருக்கு இருக்கிறதென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படிப்பட்ட கொடுங்கோலர் ஆட்சியில் நாம் எத்தனை நாட்களுக்குத்தான் ஓட்டிக் கொண்டிருக்க முடியும்? நாம் என்ன அடிமைகளாக வாழ்ந்த இனமா?

ஒரு காலத்தில் நம் மூதாதையர்கள் வாழ்ந்த சிறப்பு மிக்க வாழ்வு நாம உணராததல்லவே! காவரி நதி தீரத்தினுடைய அழகிய பூஞ்சோலைகளும், வயல் வெளிகளும, வண்ணத் தடாகங்களும, கடற்கரைகளும், கடற்கரையிலேயிருந்து மரக்கலங்கள் வெளி நாடுகளுக்குச் சென்றன என்ற காட்சிகளும் நமக்கு நினைவுக்கு வரத்தான் செய்கின்றன.

கிரேக்க நாட்டில், ரோம் நகரத்து வீதிகளில்,யாழ்ப்பாணத் தெருக்களில், சீன நாட்டு நெடுஞ் சுவர்களுக்கு அருகில், சிறப்புமிகு சாவகத்தில் தமிழ் நாட்டினுடைய மிளகு, மயில், சந்தனம போன்ற ஒப்பற்ற பொருள்களுக்கு இருந்த மதிப்பு நமக்குத் தெரியும்!

தமிழ் நாட்டுப் பெரும் வீரர்கள் அங்கெல்லாம் அணிவகுத்துச் சென்ற காட்சிகளையும்

முதல் நாள் இரவு ஆசிரியர் மு. க. நடித்த 'உதய சூரியன்' நாடகத்தில் ஒரு காட்சி!

சமர்க் களத்திலே குதிப்போம்! சாவே வந்திடினும் ஏற்போம்!

நம் மனக் கண் முன்னாலே கொண்டுவரத்தான் முடிகிறது.

இங்கேயிருக்கின்ற கோபுரங்களையும், அதன் சிற்பவேலைகளையும் பார்க்கின்ற நேரத்தில்—மண் மேடிட்டுப் போயிருக்கிற பூம்புகார் நகரை நினைக்கின்ற நேரத்தில்—மாமல்லபுரத்துச் சிற்பத்தைத், கங்கைகொண்ட சோழபுரத்துச் சிற்பத்தை, கோட்டை கொத்தளங்களை, பெரிய பெரிய அணைக்கட்டுகளை தஞ்சைத் தரணியின் வளம் கொழிக்கும் வயல்களைப் பார்க்கின்ற நேரத்தில் உழைப்பும் நல்ல உறுதியும் கொண்ட இனம் ஏனோ இப்படி ஆனது என்று நம்மை அறியாமல் கேட்டுக் கொள்கிறோம்!

இந்த நிலை இந்த தலைமுறையோடாவது தொலைந்து விடுமா என்ற கேள்விக்கு விடைகாணத்தான் இவ்வளவு பெரிய மகத்தான எழுச்சி இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது!

இல்லாவிட்டால் இவ்வளவு பிரமாண்டமான மாநாடு ஏன்? லட்சக் கணக்கில் இப்படிக் கூடுவது ஏன்? கூடுவது மட்டுமல்ல; கண்களிலே வருகின்ற கண்ணீரையும் துடைத்துக் கொள்கிறார்கள்! படுகிற சிரமங்களைத் துச்சமென மதிக்கிறார்கள்! தங்களுடைய குடும்பத்தை—சுகபோகத்தை — சிரமத்தை மறந்து ஒன்றுபடுகிறார்கள் என்றால், இந்த நாட்டிற்கு விரைவிலே ஒரு நன்மை வருகிறது என்றுதானே பொருள்?

நாம் நம் அடிமை விலங்கினை ஒடித்தெறிய எடுத்துக் கொள்கின்ற முயற்சியிலே — குதிக்கின்ற போராட்டத்திலே—செத்துத் தொலைந்தாலும் பரவாயில்லை!

சாவு நமக்கு என்ன பயங்கரமானதா? எத்தனையோ பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் திடீரென்று செத்துவிடுகிறார்கள்! பஞ்சாப் நாட்டின் மிகப் பெரும் தேசியத் தலைவர் டாக்டர் கான்சாகிப் என்ற 78 வயது நிரம்பியவர், எவனோ ஒரு வெறியனால் கொல்லப்பட்டார் என்ற செய்தி வருகிறது. நல்ல பண்பாளர் — அப்படிப்பட்டவருக்கே இதே முடிவு ஏற்படுகிறதென்றால், சாவைக் கண்டு அஞ்சலாமா?

சாகாமலா இருக்கிறோம்; ஒரு புயல் அடித்தால் நூற்றுக் கணக்கிலே மரணம் நேரிடுகிறது! ஆகவே, ஒரு பெரிய போராட்டத்தில் நம் தலைமுறையிலே, சமயம் குறுக்கிட்டால் பல உயிர்களை பலிகொடுக்க நாம் தயாராகத்தான் இருக்க வேண்டும்!

அத்தகைய ஒரு முரட்டுத்தனத்தை — பிடிவாதத்தை — திமிரை—ஆணவத்தை— உண்மையிலேயே நாம் பெற்றுத்தீர வேண்டும்!

நாம் அடிமைகளாகவே—கோழைகளாகவே வாழ்வதற்குப் பிறக்கவில்லை. நமக்குப் பின்னால் வருகிறவர்களாவது, நம்முடைய சந்ததியினராவது இந்த நாட்டிலே சுதந்திரமான மக்கள் என்ற நிலையைப் பெற்று உலவட்டும்! அந்தத் தெளிவை இன்றைய தினம் திராவிட சமுதாயம் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் பெற்று வருகிறது!

ஒரு பெரிய இனம் விழிப்படைந்துவிட்டால்—எழுச்சி பெற்றுவிட்டால் அதனை அழித்ததாக உலகத்திலே எங்கேயுமே சரித்திரம் இல்லை!

ஒரு பெரிய படையை—காக்கிச் சட்டைகள் அணிந்திருப்பவனை—துப்பாக்கித் தூக்கியிருப்பவனை — வேண்டுமானால் தோற்கடித்து விடலாம்.

கன்பூஷியஸ் என்ற சீனநாட்டுப் பேரறிஞர் சொன்னார், "குடியானவ மக்களை — விவசாயிகளின் உறுதியான மனப்பான்மையை என்றைய தினமும் தோல்வி அடையச் செய்ய முடியாது!" என்று.

சேனைகள் தோற்கலாம்—நெப்போலியன் தோற்றிருக்கிறான்; நெல்சன் தோற்றிருக்கிறான்; அலெக்சாண்டர் தோற்றிருக்கிறான்!

ஆனால், இங்கே கூடியிருக்கிற திராவிட வாலிபர்களே! உங்களுடைய மகத்தான உறுதியை—நேருவானாலும் சரி; வேறு யார் வந்தாலும் சரி; அழிக்க முடியாது!

இத்தாலிய நாட்டு விடுதலை வீரன் மாஜினி மக்களைப் பார்த்துச் சொன்னான். "இந்த நாட்டினுடைய சுதந்திரப் போராட்டத்திற்கான தலைப்பைத் தந்து விட்டோம். அதனுடைய அத்தியாயங்களை எழுத வேண்டியது உங்களுடைய கடமை!" என்று!

அதைப்போலத்தான் நம்முடைய அரிய தலைவர் அண்ணா அவர்கள் திராவிட நாட்டின் எதிர்கால வாழ்வுக்கான நல்ல தலைப்பைத் தந்திருக்கின்றார்கள். அதுதான் "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது. அதனுடைய அத்தியாயங்களை—பாகங்களை - வரிகளை - எழுத வேண்டிய கடமை உங்களிலே எல்லோருக்கும் உண்டு என்பதை - எண்ணிக்கொள்ளுங்கள்! ஃ

ப. உ. சண்முகம்...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

என்றாவது ஒருநாள் நாம் சாகத்தான் போகிறோம்! எங்கெங்கு ஓடினாலும், எத்தனை பூசைகள் செய்தாலும், எத்தனை கோயில்களை வலம் வந்தாலும், எத்தனைத் திருக்குளங்களில் மூழ்கி எழுந்தாலும், சாவு நம்மை விட்டுப் போகாது!

நாமெல்லாம் சரித்திரம் படைத்த இனம்; நாம் வாழ்ந்து கெட்ட சரித்திரத்தை உணர்ந்தவர்கள்!'

இளங்கோவடிகள் காட்டிவிட்டுப்போன சிலப்பதிகாரக் காட்சிகள் — தமிழகத்திலே — ஏன், இன்றைய தினம் திருவாரூரின் அழகிய தெருக்களிலே ஊர்வலமாக வந்ததை நாம் பார்த்தோம்! சேரன் செங்குட்டுவன் கனகவிசயர் தலையிலே கல் சுமந்து அழைத்துவந்த நிகழ்ச்சியைக் கண்டோம்!

அதைப்போல் இன்றைய தினம் வடக்கே காமராசர் தலையிலே தென்னாட்டு அதிகாரம் என்ற கல் வைத்து சுமக்கச் செய்திருக்கிறார், பண்டித நேரு!

அங்கு சேரன் செங்குட்டுவன் செய்தான்; இங்கு பண்டித நேரு செய்கிறார்!

அன்று கனகவிசயர் சுமந்து வந்தனர்; இன்று காமராசரும், சுப்பிரமணியமும் சுமந்து கொண்டிருக்கிறார்கள்! அதுதானே வித்தியாசம்!

கண நேரம் சிலப்பதிகாரத்தைக் கண்முன் கொண்டுவந்து பார்த்தால் நாம் நம் நிலையை—நமது பணியை உணர்ந்து கொள்ள முடியும்!

ஆங்கிலமே பொது மொழியாக இருக்க வேண்டுமென்று நாமும் நல்லவர்களும் கோருகிற நேரத்திலே, அது அன்னிய மொழி என்று தூற்றுகிறார்கள், ஆட்சிபீடத்தினர்!

வெள்ளைக்காரன் கையாண்ட நாகரீக முறைகள் தேவை; அவன் விட்டுவிட்டுப் போயிருக்கிற சட்டங்கள் தேவை; துருப்பிடித்த துப்பாக்கிகள் தேவை; அவன் தருகிற தோட்டாக்கள் தேவை; டாலர்கள் தேவை! ஆனால் அவன் தந்த மொழி மட்டும் தேவையில்லையா?

அவைகளை எல்லாம் வேண்டாம் என்று சொல்! மோட்டார் காரிலே வராதே; கட்டை வண்டியைப் பூட்டு!

என்ன காரணம் அதற்கு?

இந்தியைப் புகுத்தியாக வேண்டும்! அதுதான் குறிக்கோள்!

நாம் அனுமதிக்க முடியுமா அதை? அருமை இளைஞர் உலகமே! தாய்க்குலமே! திராவிடத் தோழர்களே! அன்பழைப்பு விடுக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்! தயவு செய்து வாருங்கள்! மொழி காப்போம்! தமிழ் மொழி காப்போம்! செங்குட்டுவனுக்கு முன் அகத்தியனும், தொல்காப்பியனும், வள்ளுவனும், இடையிலே வந்துவிட்டுப்போன கம்பனும் வளர்த்துவிட்டுப் போன தமிழ் மொழியை கடைசியாக வந்திருக்கிற காமராசர் அழிக்கப் பார்க்கிறார். அதை அனுமதியோம் நாம்!

இறுதியாக திராவிட முன்னேற்றக் கழகத்துப் பொதுச் செயலாளரை நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்வேன், "நாவலரே! எப்போது திராவிடம் பிரியப்போகிறது? இளைஞர்களது உள்ளங்களிலே எல்லாம் சுடர்விட்டுக்கொண்டிருக்கிற அந்தத் தீப விளக்கு எப்போது நிலவாகப் போகிறது? எப்போது அதற்கு உயிர்ப் பலிகள் தேவை? திராவிடம் பிரியும் நன்னாள் என்னாள்? அதற்குக் குறிப்பிடப்படும் தேதி என்ன? தயவு செய்து சொல்லுங்கள்! இந்த மாநாட்டை நான் திறந்து வைக்கிறேன்! பொதுச் செயலாளர் அவர்களே! திராவிடம் பிரிவதற்கான வழி வகைகளை நீங்கள் திறந்து விடுங்கள்! நாளைத் தள்ளிப் போடாதீர்கள்!" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு இந்த மாநாட்டைத் திறந்து வைக்கிறேன். ஃ

புகைப் படங்கள்:
கிருஷ்ணா ஸ்டுடியோ
திருவாரூர்.

மாநாட்டு மேடையில்
ஒரு தோற்றம்.

அண்ணு பேச்சு...

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

ஞர். உடனே கவர்னர் அழைத்து, 'தனி நாடானல் என்ன கதி நேரிடும் தெரியுமா? தனி நாடு என்று பிரகடனப் படுத்திய மறு வாரமே ரஷ்ய நாட்டுக்காரர்கள் இந்தத் தீவிலே வந்து உட்கார்ந்து விடுவார்கள்!'' என்று மிரட்டினர்.

''எனக்கென்ன அதிலே அச்சம்? உங்கள் நாட்டிற்கு பக்கத்திலே இருக்கிறது மால்ட்டா. அப்படி ரஷ்யர்கள் வந்தால், இங்கிலாந்துக்குப் பக்கத்திலேயே வந்தவர்களாவார்கள். அது உங்களுக்கு நிச்சயம் பிடிக்காது! நீங்களே வந்தல்லவா துரத்துவீர்கள்! ஆகவே அது பற்றிய கவலை எனக்கில்லை. நான் கேட்கிற அளவிற்குப் பணம் கொடுக்க முடியுமா? அல்லது தனிக்கொடி ஏற்றட்டுமா?'' என்று மின்டாஸ் கேட்டார்.

அத்தகைய மிகச் சின்னஞ்சிறு தீவு பிரிந்து செல்லுவதாகச் சொல்லி விட்டது. அது மட்டுமல்ல; மறுபடியும் மறுபடியும் எத்தனை முறைகள் தேர்தல் வைத்தாலும் அந்தத் தொழிற் கட்சியேதான் வெற்றி அடையும்.

நான் ஏறக்குறைய எந்த நிலைமையை விளக்கிக் கொண்டிருந்தேனே, அந்த நிலைமை மால்ட்டா தீவிலே இன்றைய தினம் நடைபெற்று வருகிறது.

மால்ட்டா போன்ற ... தீவுதனில் அத்தகைய நிலைமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால், பார் புகழும் பண்புகள் பெற்ற நாம் முயற்சி எடுத்துக் கொண்டால்—நம்மை நாமே அறிந்து கொண்டால் — உண்மையைத் தெரிந்து கொண்டால் — நான் குறிப்பிட்ட நிலைமைகள் ஏன் இங்கு ஏற்பட முடியாது?

ஆகையினால்தான் சட்ட சபைக்குச் செல்லுவதினால் பலன் இருக்கிறது. அப்படிச் சென்றதால்தான் இப்போது டெல்லி பாராளு மன்றத்தில்— ஒரு பக்கத்தில் பண்டித நேருவும், மற்றொரு பக்கத்தில் கோவிந்த வல்லப பந்தும், இன்னொரு பக்கத்தில் பெரிய பெரிய காங்கிரஸ் அமைச்சர்களும் இருக்கின்ற இடத்தில் — நாம் அனுப்பிய சம்பத் எழுந்து நின்று, ''இங்கே நடைபெறுவது இந்தி ஏகாதிபத்தியம்!'' என்று துணிந்து சொல்ல முடிந்தது!

நீங்களும் நானும் திராவிட முன்னேற்றக் கழகமாக கொட்டும் மழையில் ராயபுரத் திடலில் ஆரம்பித்த நேரத்தில், சம்பத் டெல்லிக்கு அனுப்பப் பட்டு, நேரு பண்டிதருடைய கண்ணுக்கு எதிராக உட்கார்ந்து, அவரது காது கேட்கும் படியாக ''நாங்கள் திராவிட மக்கள்! நாங்கள் தனியாகப் பிரிந்து போக விரும்புகிறோம்! இந்தி ஏகாதிபத்யத்தை விரும்போம்!'' என்று உரிமை முழக்கமிடுவான் என்றும், அது பத்திரிகைகளிலே வரும் என்றும், அதை யெல்லாம் பார்ப்போம் என்றும், என்றாவது எண்ணியிருக்க முடியுமா? நடைபெற்றதே அந்தக் காட்சி!

ஓட்டு பெறாவிட்டால் இந்த நிலைமை வந்திருக்க முடியுமா?

எப்படி குழந்தைகள் பிறந்தால் அவைகளுக்கு ராமா, கிருஷ்ணா என்று பெயர் வைத்து அவைகளை அழைக்கின்ற நேரத்திலாவது அது ஆண்டவன் காதிலே விழாதா என்று பக்தர்கள் கருதுகிறார்களோ, அதைப்போலவே நாங்கள் சொல்லுவது காதில் விழுந்தாலும் விழாவிட்டாலும் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று தினந்தோறும் சட்டசபையில் சொல்லித்தான் வருகிறோம்.

குடகனாறு திட்டம் பற்றி கருணாநிதி பேசினால், அதன் நீள அகலத்தைச் சொல்லி, அதனால் எவ்வளவு நன்மை இருக்கிறது என்று விளக்கி, கடைசியில் ''இதெல்லாம் திராவிட நாடு திராவிடருக்கானால் நடக்கும்!'' என்று சொல்லி விட்டுத்தான் உட்காருகிறார். வெட்ட வெளியிலேயும் முச்சந்திகளிலேயும், கடற்கரை ஓரத்திலேயும் கேட்டுக் கொண்டிருந்த நம் உரிமை முழக்கம்—இலட்சியப் பேச்சு பாராளு மன்றத்திலும், சட்ட மன்றத்திலும் நித்தம் நித்தம் பேசப்படுகின்ற நிகழ்ச்சியாகிவிட்டது!

ஆகவேதான் பலனில்லை

மாநாட்டுத் தலைவர் மதி; அறிஞர் அண்ணு; ஆகியோருடன் நாயன இசை விருந்தளித்த குளிக்கரை பிச்சையப்பா அவர்கள்.

என்று சொல்லுகின்ற திராவிடக் கழகத் தோழர்கள் தயவு செய்து இப்போது செல்லுகின்ற பாதையிலிருந்து கொஞ்சம் விலகி அடுத்த பொதுத் தேர்தலில் தேர்தலுக்கு நில்லுங்கள். நீங்கள் நிற்கிற இடத்திலே நாங்கள் போட்டியிடவில்லை. போட்டியிடாதது மட்டுமல்ல; நீங்கள் எங்களுக்கு நடத்திக் காட்டியதை மறந்தும் உங்களுக்கு நாங்கள் நடத்திக் காட்ட மாட்டோம். உங்கள் வெற்றிக்கு நாங்களும் பாடுபடுகிறோம். உள்ளே வாருங்கள். 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சொல்லுங்கள். திராவிடத்தின் வளங்களை எடுத்துச் சொல்லும்போது உங்களுக்கு திருப்தி ஏற்பட்டால், 'இத்தனை வளங்களையும் விட காமராசர் என்ற ஒரு வளமும் இருக்கிறது' என்று சொல்லுங்கள். திருவாரூர் திராவிடர் கழக வாடை அதிகமாக இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கிற காரணத்தால், இந்த நல்ல சேதியை அவர்களுக்குச் சொல்லுகிறேன். ஏன் கருணாநிதி மட்டும் 'கலைஞர் கருணாநிதி எம். எல் ஏ.' என்று இருக்க வேண்டும்? ஏன் அந்தப் பெயருக்குப் பின்னால் இருக்கின்ற மூன்று எழுத்துக்கள் உங்களுக்கும் தேவையில்லை என்று கருத வேண்டும்? எழுத்துக்கள் அல்ல முக்கியம்! அவைகளின் உதவி கொண்டு சட்ட மன்றத்திலே வந்து சொல்லுகின்ற பேச்சுகளைத்தான் உலகம் மதிக்கிறது; கவனிக்கிறது!

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று பேதம் காட்டுவதில்லை, நான். பிறந்த இடத்திலே பெருமை இருந்தால்தான், வாழுகின்ற இடத்திலே பெருமை இருக்க முடியும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். பெற்ற பிள்ளையைத் தூற்றினால் தகப்பனுக்குத்தான் ஏச்சு வருமென்பதை பெரியார் என்னவோ தெரிந்து கொள்ளவில்லை! அது ஒன்றுதான் எனக்கும் அவருக்கும் வித்தியாசம்!

நான் படித்த பள்ளிக்கூடம் சிலாக்கியமானது; நான் கண்ட தலைவர் சிலாக்கியமானவர்; இடைக் காலத்தில் அவர் யார் யார் கிடைத்தார்களோ அவர்களுக்குத் தலைவராகி; எந்த எந்த சீடர்கள் கிடைத்தார்களோ அவர்களுக்கு ஏற்றவாறு தனது சுபாவத்தை மாற்றிக்கொண்டார்!

அப்படி சட்ட மன்றத்திலே எழுப்பப்படுகின்ற நமமுடைய திராவிட நாட்டுப் பிரச்சினைக்கு இன்றைய தினம் காங்கிரஸ்காரர்கள் சொல்லுகின்ற மறுப்புகளில் 'திராவிடம் சின்னஞ்சிறு நாடு; ஆகவே தனியாக இருக்க முடியாது. என்பது ஒன்று! அதற்கு மட்டும் நான் இரண்டொரு மேற்கோள்கள் காட்ட விரும்புகிறேன்.

''ஒரு நாட்டினுடைய முக்கியத்துவம் அதன் விஸ்தீரணத்திலே இல்லை; மக்களுடைய தொகையிலே இல்லை; ஆனால் மக்களுடைய உணர்ச்சியைப் பொறுத்துத்தான் இருக்கிறது!

'அந்த நாடு **2,000** மைல் நீளமா; **200** மைல் அகலமா என்பதைப் பொறுத்து அதன் வலிவு இல்லை; யுத்த காலத்தில் வேண்மோனால் அது முக்கியமானதாக இருக்கலாம். சமாதான காலத்தில் மக்களுடைய மனப்பான்மை எப்படியிருக்கிறது; இயல்பு எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்த நாட்டின் முக்கியத்துவம் இருக்கிறது!''

—என்று ஒரு பேரறிவாளர் கூறி இருக்கிறார். அதுவும் காங்கிரஸ்காரர்கள் ஒப்புக் கொள்ளுகின்ற ஒரே ஒரு பேரறிவாளர் பண்டித நேருதான் சொல்லியிருக்கிறார், ஐரோப்பா கண்டத்தில், ஹேக் என்ற ஊரில், சென்ற ஆண்டு, ஜூலை மாதம், 9-ம் தேதியன்று!

நாடு சிறியதாக இருந்தால் என்ன; மக்களுடைய மனப் பண்புதான் முக்கியம் என்று நேருவே சொல்லியிருக்கிறார்.

மற்றொன்று...

''சிறிய நாடாக இருக்கின்ற காரணத்தினால் சர்வ தேச அரங்கத்தில் நன்மை கிடைக்காது—மதிப்பு இருக்காது என்று எண்ணுவது ஆபத்தானது; தோல்வி மனப்பான்மை காட்டத் தக்கது! அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். உலகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய தீர்மானங்களை வகுக்கின்ற நேரத்தில் சிறிய நாடுகளை பெரிய நாடுகள் புறக்கணிப்பது பெரிய நாடுகளுக்கே ஆபத்தானது!''

—என்று பர்மாவின் முதல் மந்திரி யூ-நூ என்பார் சொல்லியிருக்கிறார்.

இந்த இரண்டு ஆதாரங்களையும் காட்டியான பிறகு வேறு என்ன மறுப்பு தர முடியும், காங்கிரஸ் தோழர்கள்? ஒன்று சொல்லலாம், நேரு நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ள மாட்டார் என்று! அதற்கும் நான் மேற்கோள் காட்டுகிறேன்.

''இந்திய பூபாகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி தனியாக விலகிப் போக வேண்டும் என்ற கோரிக்கை பல நேரத்தில் சொல்லப்படுகிறது. அந்த உரிமை வலியுறுத்தப் படுவதற்கு முன்னாலே இந்தியாவில் ஒரு சுதந்திர அரசு நன்றாக இயங்கிக் கொண்டிருக்கவேண்டும். வெளி ஏகாதிபத்தியம் முழுதும் விலகிய பிறகுதான் பிரிவினைப்பற்றிப் பேச நல்ல நேரம்! அப்போதுதான் விருப்பு, வெறுப்பு இல்லாமல் பிரச்சினையைக் கவனிக்கலாம். அதற்கு ஒருநாள்கூட குறிக்கலாம், சுதந்திர இந்தியாவாக ஆன பிறகு — பத்து ஆண்டுகள் கழித்து! அப்போது பிரிந்து போக வேண்டிய உரிமை சட்ட ரீதியான முறையில், அந்தப் பகுதி மக்களின் விருப்பத்திற்கிணங்க பிரிந்து போகலாம்!''

—இதைச் சொல்லியிருப்பவரும் பண்டித நேருதான்!

நேரு சொன்ன பத்தாண்டு காலம் கழித்து பதினோருவது ஆண்டு நடைபெறுகிறது. ஆகவே பிரிவினையைப்பற்றி பஞ்சாயத்துப் பேச இது நல்ல தருணம்! இதை நழுவ விடலாகாது! நேருவின் காலத்திலேயே கிடைத்திருக்கின்ற வாய்ப்பை இழந்துவிடக் கூடாது! ஆகவே மதிப்பு மிக்க காங்கிரஸ்காரர்கள் இங்கு சொல்லப்பட்ட உண்மைகளைப் பலமுறை சிந்தித்துப் பார்த்து, பிரிவினைக்கு ஒத்துழைக்க அழைக்கிறேன்! அதற்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தஞ்சை மாவட்டமா நாட்டு வரவேற்புக் குழுவினருக்கு என் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்! வணக்கம்.

...ரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு